மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்

## குழந்தை உரிமைகள்



www.unicef.org

# பள்ளியில் குழந்தைகளுக்கான உரிமைகள்

## இலவச, கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமைச் சட்டம் 2009

1. எந்த ஒரு ஆவணம் / ஆவணங்கள் தர முடியவில்லை என்பதற்காக எந்தக் குழந்தைக்கும் பள்ளிச் சேர்க்கைக்கான அனுமதி மறுக்கப்படக்கூடாது
2. எந்தக் காரணத்திற்காகவும் எந்த நேரத்திலும் குழந்தை / பெற்றோர் எந்தக் கட்டணமும் (பணம் / பொருள்) கட்டத் தேவையில்லை; எந்த ஆவணமும் அளிக்கத் தேவையில்லை
3. எந்தக் குழந்தையும் எந்த வகையான உடல்ரீதியான / மனரீதியான தண்டனை அல்லது பாகுபாட்டிற்கும் ஆளாக்கப்படக்கூடாது
4. எந்த ஒரு குழந்தையும் 8 வருடங்கள் கல்வியை முடிக்காமல் (1 முதல் 8வது வரை) பள்ளியை விட்டு அனுப்பப்படவோ, தோல்வி என்ற பெயரில் வகுப்பில் தொடர்ந்து இருக்க வைக்கப்படவோ கூடாது
5. வயதுக்கு ஏற்ற வகுப்பில் குழந்தைகளுக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும்; உரிய வயதிற்கு அதிகமான வயதுடைய பள்ளி சேராத குழந்தைகளுக்கு உரிய வகுப்பில் பயிலும் வகையில் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்
6. ஒவ்வொரு நாளும் ஆசிரியர்கள், வகுப்பில், குறைந்தது 4 மணி நேரமாவது பாடம் நடத்த வேண்டும்
7. ஒரு வருடத்தில் 220 நாட்கள் பள்ளி திறந்து வைக்கப்பட்டிருக்க வேண்டும்
8. தொடக்கப் பள்ளிக்கு மேற்பட்ட பள்ளியாக இருந்தால் ஒவ்வொரு பாடத்திற்கும் (அறிவியல், கணிதம், சமூக அறிவியல், மொழி) ஆசிரியர்கள் இருக்க வேண்டும். முழு நேர தலைமை ஆசிரியரும், கலை, சுகாதாரம், விளையாட்டிற்கான பகுதி நேர ஆசிரியரும் இருக்க வேண்டும்
9. ஒவ்வொரு பள்ளியிலும் கீழ் கண்டவை கண்டிப்பாக இருக்க வேண்டும்
   - அ) ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒரு வகுப்பும் தலைமை ஆசிரியருக்கு தனி அறை,
   - ஆ) மாணவ மாணவியருக்கு போதுமான அளவில் தனிக் கழிப்பறைகள்,
   - இ) குடிதண்ணீர் வசதி,
   - ஈ) பயன்படுத்தும் வகையில் உள்ள விளையாட்டு மைதானமும், விளையாட்டு உபகரணங்களும்,
   - உ) நூலகத்தில் புத்தகங்களும் வார, மாத இதழ்களும்,
   - ஊ) மதிய உணவு தயாரிக்க சமையலறை,
   - எ) தடையில்லாமல் சுலபமாக அணுகக்கூடிய பாதை,
   - ஏ) அனைத்து பருவ காலங்களிலும் தாக்குப்பிடிக்கும் கட்டிடங்களும், வேலியிட்ட / இரும்புக் கதவு கொண்ட வெளிச்சுவர்
10. ஒவ்வொரு பள்ளியிலும், பள்ளி மேலாண்மை குழு ஒன்று கண்டிப்பாக இருக்க வேண்டும், அதன் உறுப்பினர் நான்கில் மூன்று பேர் (3/4) பொதுவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பெற்றோர்களாக இருக்க வேண்டும்; பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்களின் பட்டியல் வெளிப்படையாக வைக்கப்பட்டிருக்க வேண்டும்.
11. பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள்
    1. பள்ளியின் செயல்பாட்டைக் கண்காணிக்க வேண்டும்
    2. பள்ளி வளர்ச்சி திட்டத்தை தயாரிக்க வேண்டும்
    3. ஆசிரியர்களின் பொறுப்புத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும்
12. இந்தப் பள்ளியின் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது (எந்த ஒரு உதவி அல்லது ஆலோசனைக்காக நீங்கள் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம்
    - அ) (உறுப்பினர்களின் பெயர்)
    - ஆ) (உறுப்பினர்களின் பெயர்) – என்ற தகவல் வைக்கப்பட்டிருக்க வேண்டும்
13. குறை தீர்ப்புக்கான உரிமை
14. தனியார் பள்ளிகளில் நலிந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவு குழந்தைகளுக்கு 25% ஒதுக்கீடு

**தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (NCPCR)**
**பகுதி 4 கல்வி உரிமைச் சட்டப் பிரிவு**

# மகள் பற்றாக்குறை?



**படக்குறிப்பு:**
திருச்சூர் மாவட்டம் வழச்சல் வன மண்டலத்திற்கு அருகில் உள்ள பொரிங்கள்குத்து காடர் குடியிருப்பில் ஒரு பழங்குடி சமூகச் சிறுமி

**பெண் குழந்தைகளை மதிப்பிடுவதில் கேரள சமுதாயத்தின் அணுகுமுறை மாறிவருகிறதா ? மிதமிஞ்சிய பாலினப் பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்டதாக இருந்த மாநிலத்தில் இன்றைக்கு ஆண் குழந்தைகளுக்கு முன்னுரிமை கொடுப்பது பரவி வருகிறதா ? மாநிலத்தின் குழந்தைகள் பாலின விகிதம் குறித்து அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு இக்கேள்விகளுக்குத் தருகிற பதில்களைவிட எழுப்புகிற கேள்விகள்தான் அதிகம்.**

**– ஆர். கிருஷ்ணகுமார், திருவனந்தபுரம்**

நவீன மருத்துவ சோதனை முறைகளைப் பயன்படுத்தி வயிற்றில் உள்ள சிசுவின் பாலினத்தை பெற்றோர் தெரிந்துகொண்ட பிறகு, பெண் சிசுக்களை கருக்கலைப்பு செய்வது என்பது பல்வேறு மாநிலங்களில் ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தைகளின் எண்ணிக்கை சரிவடைந்து வருவதற்கான ஒரு முக்கிய காரணமாகும்.

'பாலின பிறப்பு விகிதம்' அல்லது பிறக்கிற 1,000 ஆண் குழந்தைகளுக்கு எத்தனை பெண் குழந்தைகள் என்ற விகிதம் குறைந்து வருவது, குழந்தைகளின் பாலினத்தை கண்டறிந்து கருக்கலைப்பு செய்வது அதிகரித்து வருவதன் ஒரு அறிகுறியாகும். அத்துடன் வேறு பல காரணங்களும் இருக்கக் கூடும் என்ற போதிலும், வீட்டில் மகள்கள் இருப்பதை சமுதாயம் விரும்பவில்லை என்பதன் அறிகுறியுமாகும். இந்தப் பாலின பாகுபாட்டின் மற்றொரு கவலைக்குரிய அம்சம் என்னவெனில், குடும்பம் சார்ந்த ஆதாரங்களில் பெண் குழந்தைகளுக்கு சமமான பங்கீடுகள் கிடைப்பதில்லை என்பது. அதைபோல் மருத்துவ கவனிப்பு, ஊட்டச்சத்து போன்றவற்றிலும் பெண் குழந்தைகளுக்கு பாகுபாடு காட்டப்படுகிறது. இந்தியாவின் பல பகுதிகளிலும் இந்தப் பாகுபாடு தீவிரமாகத் தொடர்கிறது. அது பெண் குழந்தைகள் உயிர் வாழ்வதையே கடுமையாக பாதிக்கிறது. ஆக, பிறக்கும்போதும், குழந்தைப் பருவத்திலும் பெண் குழந்தைகள் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள். 'குழந்தைகள் பாலின விகிதம்' அடிப்படையில் இந்தப் பாகுபாட்டின் தீவிரத் தன்மையை சமூக விஞ்ஞானிகள் மதிப்பிடுகிறார்கள். 0–6 வயதுப் பிரிவினரில் 1,000 ஆண் குழந்தைகளுக்கு எத்தனை பெண் குழந்தைகள் என்பதே குழந்தைப் பாலின விகிதம் என்பதாகும். ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில், பல்வேறு நிகழ்வுகளுக்கிடையே, 0–6 வயதுப் பிரிவினரிடையே

பெண் குழந்தைகளின் மரண விகிதத்தையும், பாலினத் தேர்வு அடிப்படையில் பெண் சிசுக்கள் கருக்கலைப்பு செய்யப்படுகிற விகிதத்தையும் இந்த 'குழந்தைகள் பாலின விகிதம்' பிரதிபலிக்கிறது. குாந்தைகளின் பாலின விகிதத்தில் சரிவு ஏற்படும் போதெல்லாம், பெண் குழந்தைகளின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைவதற்கு முக்கியமான காரணம் என்ன என்ற கேள்வி எழுகிறது. (அ) பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகளே தேவை என்று பெற்றோர்கள் விரும்புவதாலா ? அதுதான் பாலின தேர்வு அடிப்படையிலான கருக்கலைப்புகளுக்கு இட்டுச் செல்கிறதா; (ஆ) ஊட்டச்சத்து, சுகாதார கவனிப்பு போன்ற விஷயங்களில், பிறப்புக்குப் பிறகு பெண் குழந்தைகள் பாகுபடுத்தப்படுகிறார்கள் என்பதுதான் காரணமா ? அதுதான் 6 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளில் அசாதாரணமான மரணம் என்ற மோசமான போக்கிற்கு இட்டுச் செல்கிறதா ?

### மாறி வரும் காட்சி:

பெண்களிடையே மிக அதிக அளவிற்கு எழுத்தறிவு பரவியுள்ள, பெண் கல்வியில் ஒரு நீண்ட பாரம்பரியம் உள்ள, சமுதாயத்தில் ஒரு சுதந்திரமான நிலையை பெண்கள் பெற்றுள்ள, சில சமூகப் பிரிவுகளில் பெண்களுக்கு பாரம்பரியமான சொத்துரிமை உள்ள, வெளி உலகத்துடன் பெண்கள் விரைவிலேயே தொடர்புகொள்ளும் வாய்ப்புள்ள, ஒரு சமமான அரசியல் பண்பாடு உள்ள மாநிலமாக கேரளம் திகழ்ந்து வந்தது. பெண் குழந்தைகளுக்கு எதிரான தேசிய நிலவரத்திலிருந்து மாறுபட்ட ஒரு மாநிலமாகவும் கேரளம் இருந்து வந்தது.




www.nation.com.pk

ஆனால், 1990ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் இத்தகைய மதிப்பீடுகள் இனியும் தொடர முடியுமா என்று சில அறிஞர்கள் கேள்வி எழுப்பினார்கள். 1991ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பை அவர்கள் ஆதாரம் காட்டினார்கள். 1,000 ஆண் குழந்தைகளுக்கு எத்தனை பெண் குாந்தைகள் என்ற விகிதம் கேரளத்தில் வீழ்ச்சியடைந்து வந்திருப்பதை அந்தக் கணக்கெடுப்பு எடுத்துக்காட்டியது. இந்த விவரங்கள் "மாநிலத்தில் பெண்களின் மதிப்பான நிலை மங்கி வருவதன் வெளிப்படையான அறிகுறிகள்தான்," என்று அந்த சமூகவியலாளர்கள் கூறுகிறார்கள். வரதட்சணை முறை அதிகரிப்பு, பெண்களுக்கு எதிரான குற்றங்களும் வன்முறைச் செயல்களும் அதிகரிப்பு, ஊதியம் சார்ந்த வேலை வாய்ப்புகளிலிருந்து பெண்கள் ஒதுக்கி வைக்கப்படும் நிலை அதிகரிப்பு ஆகிய நிலைமைகளின் அறிகுறிகள்தான் இவை என்று அவர்கள் கூறுகிறார்கள்.

கேரளத்தில், குறிப்பாக பெண்களை இலக்கு வைத்து, தனியார் மருத்துவமனைகளும் மருத்துவ சோதனை நிலையங்களும் பெருகியிருப்பது, பல மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை அடிப்படையிலான பிரசவங்களும் கருப்பை நீக்க அறுவை சிகிச்சைகளும் (உலக சுகாதார நிறுவன நெறிமுறைப்படி) "நியாயமற்ற முறையில்" அதிகரித்து வருவதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். கிட்டத்தட்ட அனைத்து பிரசவங்களும் மருத்துவமனைகளிலேயே நிகழும் இந்த மாநிலத்தில் கருக்கலைப்புகளின் எண்ணிக்கையும் பல மடங்காக அதிகரித்திருப்பதை அவர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். கருவுறுதல் விகிதம் குறைகிறது. கருத்தடை விகிதம் அதிகரிக்கிறது. அரசு அங்கீகாரம் பெற்ற கர்ப்பத்தடை மருத்துவக் கூடங்களின் எண்ணிக்கையும் கேரளத்தில் அதிகரித்துள்ளது. "குடும்பக் கட்டுப்பாடு நடைமுறைகளை மேற்கொள்வதைவிட கருக்கலைப்பை ஒரு எளிதான வழியாக" தேர்ந்தெடுக்கும் கேரள தம்பதியினரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். இந்த விவரங்கள் ஆண் குழந்தைகளுக்கான தேர்வு அதிகரித்து வருவதை காட்டுகிறது, கேரளத்தில் பாலின அடிப்படையிலான கருக்கலைப்புகள் அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்றெல்லாம் கூறியபோது அதை பலரும் நிராகரித்தார்கள். மாநிலத்தில் குழந்தைகள் பாலின விகிதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டதற்கு, பெண் குழந்தைகளுக்கு எதிரான பாகுபாடு ஒரு காரணமாக இருக்கக் கூடும் என்று விவாதிப்பதற்குக் கூட யாரும் தயாராக இல்லை.

இந்திய மருத்துவ சங்கத்தின் (ஐஎம்ஏ) கேரளப் பிரிவு, அந்த மாநிலத்தில் பாலின அடிப்படையிலான கருக்கலைப்பு நடைபெறுகிறது என்பதை மறுத்தது. மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையில் இதுகுறித்து விவாதிக்கிறவர்கள், 1991ம் ஆண்டில் பதிவான குழந்தைகள் பாலின விகித சரிவை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்கிற தவறைச் செய்கிறார்கள், இதே போன்ற சரிவு, பாலின அடிப்படையிலான கருக்கலைப்புத் தொழில்நுட்பங்கள் இல்லாத காலத்திலேயே, 1981ம் ஆண்டு கணக்கெடுப்பிலேயே குழந்தைகள் பாலின விகிதம் குறைந்திருந்ததை காணத் தவறுகிறார்கள் என்று சிலர் வாதித்தார்கள். மாநில அரசு அவசர முடிவுகளுக்குப் போய்விடக் கூடாது என்று பலர் எச்சரித்தார்கள். "பிறப்பிலேயே பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகளின்

எண்ணிக்கை அதிகமாக இருப்பது என்பது உலகம் முழுவதுமே நிகழ்கிறது என்பதற்கான வலுவான மருத்துவச் சான்றுகள் உள்ளன. கேரளத்தில் ஒட்டுமொத்த கருவுறுதல் விகிதம் குறைந்து வருவது, பெண்கள் கருத்தடை செய்து கொள்வதில் தீவிரமாகி வருவது ஆகியவற்றின் பின்னணியில் மாநிலத்தின் மக்கள் தொகையில் ஆண் இனத்தின் அதிகரிப்பு என்பது இயல்பாகவே நடக்கக் கூடும்,'' என்று ஒரு ஆய்வாளர் 'ஃரெண்ட் லைன்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறினார். எனினும், கொள்கைகளை வகுக்கும் இடத்தில் உள்ளவர்கள் தங்களது அலட்சியப் போக்கை கைவிட வேண்டும் என்று மற்றவர்கள் வலியுறுத்துகிறார்கள். ''இதற்கான சூழல்கள் வாய்ப்பாக அமைந்துள்ளன. கருவிலேயே சிசுவின் பாலினத்தை அறிவதற்கும் கருக்கலைப்புக்குமான வசதிகள் பரவலாகக் கிடைக்கின்றன. மருத்துவர்கள் மறுக்கிறார்கள் என்பதாலேயே கேரளத்தில் இப்படி நடக்கவில்லை என்று சொல்லிவிட முடியுமா,'' என்று அவர்கள் கேட்கிறார்கள். இந்த சலசலப்பு சிறிது காலத்திற்குப் பிறகு தானாகவே அடங்கிவிட்டது. 1981, 1991 ஆகிய கணக்கெடுப்புகளின் படி பதிவான குழந்தைகள் பாலின விகிதத்தின் வீழ்ச்சி, 2001ல் மாறிவிட்டது என்று சில ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். 2001ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு இதில் ஒரு முன்னேற்றத்தை அவர்கள் காட்டுகிறார்கள்.

### புதிய ஆய்வு:

கேரள அரசின் சமூக நலத்துறை அண்மையில் மேற்கொண்ட ஒரு ஆய்வு இந்த விவாதத்தை மீண்டும் முன்னுக்கு கொண்டுவந்துள்ளது. திருவனந்தபுரத்தில் உள்ள அரசு மகளிர் கல்லூரியின் பொருளாதாரத்துறை முன்னாள் தலைவர் எம். கபீர், மேம்பாட்டு ஆய்வு மையத்தின் முன்னாள் பேராசிரியர் கே. புஷ்பாங்கதன் ஆகியோர் இந்த ஆய்வை நடத்தினர். மாவட்ட வாரியான புள்ளி விவரங்களும் கால இடைவெளி அடிப்படையிலான மதிப்பீட்டு விவரங்களும் கேரளத்தின் பாலின சமத்துவ நிலைமை அப்படி ஒன்றும் சிறப்பாக இருப்பதாய் சுட்டிக்காட்டவில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். ''கடைசியாக மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு விவரங்கள் கேரளத்தின் குழந்தைகள் பாலின விகிதம் குறைந்திருப்பதாக காட்டின. அதனால்தான் மாநில அரசு இந்த ஆய்வை மேற்கொள்ளப் பணித்தது. கேரளம் போன்றதொரு மாநிலத்தில் இது ஒரு கவலை அளிக்கும் போக்காகும். உன்னிப்பாக இதை கவனிக்கத் தவறினால் நம் முகத்திற்கு நேரே இது வெடிக்கக் கூடும். ஆகவேதான், இதுகுறித்து விரிவாக ஆராய நாங்கள் முடிவு செய்தோம்,'' என்று சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலர் ராஜீவ் சதானந்தன் கூறினார். ஆய்வறிக்கையை மாநில அரசிடம் தாக்கல் செய்த பிறகு மேம்பாட்டு ஆய்வு மையத்தில் கடந்த மார்ச் மாதம் அறிக்கையின் விவரங்கள் வெளியிடப்பட்டன. அதில் உள்ள முக்கிய தகவல்கள் வருமாறு:

(அ) 1991 முதல் 20 ஆண்டு காலத்தில் கேரளத்தின் குழந்தைகள் பாலின விகிதம் குறைந்து வரும் போக்கு வெளிப்பட்டுள்ளது. 1971 – 1991 ஆகிய 20 ஆண்டு காலத்தில் 976 ஆண் குழந்தைகளுக்கு 958 பெண் குழந்தைகள் பதிவாகியிருந்தன. 2001ல் இதில் ஒரு சிறு முன்னேற்றமாக பெண் குழந்தைகள் 960 என பதிவானது. 2011ல் மீண்டும் சரிவு ஏற்பட்டு 959 என பதிவாகியுள்ளது;

(ஆ) இதே காலகட்டத்தில் மொத்தமுள்ள 14 மாவட்டங்களில் 6 மாவட்டங்கள் 0–6 வயதுப் பிரிவில் ''பெண் குழந்தைகளின் பற்றாக்குறை'' அதிகரித்தது. காசர்கோடு, கண்ணூர், வயநாடு, பாலக்காடு, திருச்சூர், இடுக்கி ஆகியவை அந்த ஆறு மாவட்டங்கள். தமிழக எல்லையை ஒட்டியுள்ள வடக்கு மாவட்டமான பாலக்காடு, 1991 முதல் மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு அனைத்திலுமே ஒரு தொடர்ச்சியான சரிவையே பதிவு செய்துள்ளது;

(இ) மாநிலத்தில் ஒன்றுக்கொன்று நெருக்கமாக அமைந்துள்ள வட்டங்களில் குறைவான பெண் – ஆண் குழந்தை விகிதங்கள் பரவி வரும் போக்கு தென்படுகிறது. கேரளத்தின் மொத்தமுள்ள 63 வட்டங்களில் 26 வட்டங்கள் 1991ம் ஆண்டைவிட 2001ல் குறைவான பெண் – ஆண் குழந்தைப் பாலின விகிதத்தை பதிவு செய்துள்ளன. 2001ம் ஆண்டைவிட 2011ல் 39 வட்டங்கள் குறைவான பெண் – ஆண் குழந்தை பாலின விகிதத்தை பதிவு செய்துள்ளன. ஆயினும், எந்த வட்டத்திலும் 1991ம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகளில், அபாயகரமான விகிதம் என கூறப்படும் 900 என்பதற்குக் குறைவான பாலின விகிதம் பதிவாகவில்லை;

(ஈ) ''பிறப்பில் ஆணினமயமாகுதல் அதிகரிப்பது'' என்ற போக்கும் தென்படுகிறது. எனினும், பிறப்பிலேயே குழந்தைகள் பாலின விகிதம் வீழ்ச்சியடைகிறது என்ற போதிலும் கூட, ''அனைத்து மாவட்டங்களிலும் அந்த விகிதங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க மக்கள் தொகை விகித அளவுக்குள், அதாவது ஒவ்வொரு 100 பெண் குழந்தைகளுக்கும் 104 முதல் 107 வரையிலான ஆண் குழந்தைகள் என்ற விகிதத்தில்'' இருக்கின்றன; 1981 முதல், 0–6 வயதுப் பிரிவிலான பெண் குழந்தைகளின் விகிதம் மரணம் கூடுதலாக இருக்கிற மாவட்டங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்பதை பல்வேறு தகவல் ஆதாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அறிக்கை வெளியிடப்பட்ட நிகழ்ச்சியில் பேசிய கபீர், தங்களுடைய ஆய்வில் மூன்று மிக முக்கிய விஷயங்கள்

கண்டறியப்பட்டுள்ளன என்று கூறினார். ‘‘ஒன்று, நெருக்கமாக இணைந்துள்ள வட்டங்களில் குழந்தைகள் பாலின விகிதம் குறைவது என்பது ஒரு தொடர்ச்சியான போக்காக இருக்கிறது. இரண்டு, பாலின பிறப்பு விகிதம் என்பது சாதாரணமான அளவுக்குள்தான் இருக்கிறது என்றாலும், அனைத்து மாவட்டங்களிலும் ஒரு சரிவு என்பது கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கிறது; மூன்று, அநேகமாக மிக முக்கியமானதாக குழந்தைகளிடையே பெண் குழந்தைகளின் மரணம் என்பது அதிகமாக இருக்கிறது,'' என்றார் அவர். குழந்தைப் பாலின விகிதம், பாலின பிறப்பு விகிதம், குழந்தைகள் மரண விகிதம் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக்கொண்ட பன்முக மதிப்பீட்டின்படி, ‘‘மரண விகிதம் பற்றிய விவரங்கள் மிக முக்கியமான கணக்கீடாக உள்ளன,'' என்றார் புஷ்பாங்கதன்.

### கவலை தரும் கண்ணோட்டம்:

அந்த அறிக்கை பின்வரும் அதிர்வூட்டும் அறிவிப்போடு முடிகிறது: ‘‘கேரளத்தின் குழந்தைப் பாலின விகிதம் குறித்து விளக்கமளிப்பதில் பாலின பிறப்பு விகிதம், மரண விகித வேறுபாடு ஆகியவை முக்கியமானவை என்று புள்ளிவிவர ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஆனால், பாலின பிறப்பு விகிதம் என்பது, சில மாவட்டங்களில் வீழ்ச்சி அடைந்துள்ள போதிலும் கூட, உலக அளவில் ஏற்கப்பட்டுள்ள 'சாதாரண' அளவுக்குள் தான் இருக்கிறது. மாறாக பெண் குழந்தைகளின் மரண விகிதம் அதிகமாக இருப்பது, பெண் குழந்தைகள் பாகுபடுத்தப்படுவது தொடர்பான ஆழமான கேள்விகளை எழுப்புகின்றன. 'வடஇந்திய மாநிலங்களிலிருந்து கேரளம் மாறுபடவில்லையா' என்ற கேள்வியை இந்த புள்ளிவிவரம் முன்வைக்கிறது.'' இதுபற்றிப் பேசிய கபீர், ‘‘பிறப்பில் ஆணினம் அதிகரிப்பு என்பது நடந்துள்ள போதிலும் கூட அந்த விகிதம் சாதாரண அளவுக்குள்தான் இருக்கிறது. இதற்குக் காரணம் மாறுபட்ட உயிரியல் சார்ந்த அம்சங்களா – இயற்கையின் காரணமாக பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகள் அதிகமாகப் பிறக்கின்றன என்பது தெரிந்த விவரம்தான் – அல்லது சில 'வெளிக்காரணங்களின் தலையீடு' காரணமாகவா என்பது எங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை. ஆனால், சாதாரண அளவுக்குள்தான் இருக்கிறது என்பதால் இது மிக ஆழ்ந்த கவலைக்குரிய விஷயம் அல்ல. எனினும், இந்த சரிவு என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதுதான். ஏன் இந்த சரிவு என்பதை ஆராய வேண்டிய தேவை உள்ளது,'' என்றார்.

கேரளத்தில் கருவிலேயே பாலினத் தேர்வு அடிப்படையில் கருக்கலைப்பு என்பது அதிகரித்திருப்பதன் விளைவாகவே குழந்தைப் பாலின விகிதம் வீழ்ச்சியடைந்திருப்பதற்கு வாய்ப்புள்ளது என்ற முந்தைய கருத்தை இந்த அறிக்கை தள்ளுபடி செய்கிறது. ஆயினும், கேரளத்தில் இதுவரை அப்படி நடக்காது என நினைக்கப்பட்டு வந்த, பெண் குழந்தைகள் பாகுபாடாக நடத்தப்படுகிறார்கள் என்ற நிலைமையின் காரணமாகத்தான் 6 வயதிற்குள் மரணமடைவது அதிகரித்திருக்கக்கூடும் என்ற இரண்டாவது வாய்ப்பை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பார்வையாளர்களில் சிலர் சூடாக வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ‘‘இது ஒரு தவறான கண்ணோட்டம். பெண் குழந்தைகளுக்கு எதிரான பாகுபாடுதான் காரணம் என்றால், கேரளத்தில் இப்போது அதற்கான வசதிகள் போதுமான அளவுக்கு உள்ளன. பெண் குழந்தை இல்லாத பெற்றோருக்கு, பெண் குழந்தை பிறக்காமல் இருப்பதை அந்த வசதிகள் உறுதிப்படுத்துகின்றன,'' என்று அவர்கள் கூறினார். சில முக்கியமான ஐயங்கள் எழுகின்றன. அறிக்கையில் கூறப்பட்டிருப்பது போல் குழந்தை பிறந்ததற்குப் பிறகு காட்டப்படும் பாகுபாடுதான் காரணம் என்றால், நெருக்கமான வட்டங்களில் பெண் குழந்தைகளுக்கு எதிரான இந்தப் போக்கு பரவுவது தொடர்பாக என்ன விளக்கம் இருக்கிறது. பாலின தேர்வு அடிப்படையிலான கருக்கலைப்பு, பாலின பாகுபாடு ஆகிய இரண்டுமே செயல்படுகின்றனவா? கேரளத்தில் 0–6 வயதுப் பிரிவில் உண்மையிலேயே எத்தனைப் பெண் குழந்தைகள் மரிக்கின்றன? அதற்கான காரணங்கள் என்ன?

20 ஆண்டு காலகமாக கேரளத்தில் ஆய்வாளர்களையும், திட்டமிடுவோரையும் கவலைக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிற ஒரு பிரச்சனை தொடர்பான கருத்தாக்கங்கள் சரியானவை என்றோ, தவறானவை என்றோ நிரூபிக்கக்கூடிய திட்டவட்டமான ஆதாரங்கள் இல்லை என்பதும், நம்பகமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் தொடர்கின்றன என்பதுதான் வேதனை தரும் வகையில் வெளிப்பட்டுள்ளது. ‘‘புதிய ஆய்வுகளை நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கலாம். அரசாங்கம் பணித்தபடி நடத்தப்பட்ட ஆய்வு, மாநிலத்தின் குழந்தைப் பாலின விகிதம் சரிவடைந்து வருவது குறித்த கேள்விகளுக்கு திருப்திகரமாக பதிலளிக்கவில்லை,'' என்றார் ராஜீவ் சதானந்தன். ஒரு சுவாரசியமான தகவல் என்னவென்றால், 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கேரள மாநிலத்தின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில், ஒவ்வொரு 1,000 ஆண் குழந்தைகளுக்கும் 1,084 பெண் குழந்தைகள் உள்ளன. பத்தாண்டுக்கு முந்தைய கணக்கெடுப்பின்படி ஒவ்வொரு 1,000 ஆண் குழந்தைகளுக்கும் 1,058 பெண் குழந்தைகள் இருந்தன என்ற எண்ணிக்கையைவிட இது கூடுதல்தான்.

**ஆதாரம்: 'Frontline May 3 2013'**

# கல்வியில் கை வைக்காதீர்கள்

– ஆனந்த் டெல் டும்ப்டே

**இன்றைக்கு மும்பை மாநகராட்சி; நாளை ஒட்டுமொத்த நாடும். கல்வி தனியார் மயமாக்கப்படுவதை ஏற்க முடியாது என நாம் உறுதியாக முழங்கியாக வேண்டும்.**

நவீன தாராளமயக் கொள்கைகள் என்னென்னவோ வாக்குறுதிகளை அளித்தன. ஆனால், அவற்றில் எதையுமே நிறைவேற்றவில்லை. மாறாக, அவை இந்தியாவின் நீண்ட நெடுங்கால பிரச்சனைகளான சமத்துவமின்மை, வேலையின்மை, சாதியம், மதவாதம் உள்ளிட்டவற்றை தீவிரப்படுத்தியுள்ளன. ஆனாலும், ஏதோ இந்தக் கொள்கைகள்தான் நிரூபணமான அற்புத மருந்துகள் என்பதுபோல ஆளும் வர்க்கங்கள் இவற்றைத் தூக்கி வைத்துக்கொண்டிருக்கின்றன. நவீன தாராளமயக் கொள்கையில் ஒரு முக்கியமான அழுத்தம், காலங்காலமாக அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வந்த சேவைகளை தனியார் முதலீட்டின் வசம் தள்ளிவிடுவதாகும். இவ்வாறு தனியாருக்கு மாற்றப்படுவதால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்வோர் மீது அரசு தனது வலிமையை எல்லாம் செலுத்துகிறது. அரசின் பொறுப்பிலிருந்த பொது ஏற்பாடுகளும் பொது உள்கட்டுமானங்களும் இப்போது பெரும்பாலும் தனியார் கைவசமாகிவிட்டன. இப்போது அரசு தனது கவனத்தை, எந்த ஒரு சமுதாயத்தின் மாற்றத்திற்கும் மிகவும் தேவைப்படுகிற கருவியாகிய கல்வியின்பால் திருப்பிவிட்டுள்ளது. ஏற்கெனவே உயர் கல்வியில் இந்த தனியார் மயமாக்கல் நடைமுறைக்கு வந்துவிட்டது. தற்போது ஆட்சியாளர்கள் பள்ளிக் கல்வியை, குறிப்பாக அடித்தட்டு மக்களுக்கான பள்ளிக் கல்வியை, சீரழிக்கத் தொடங்கியிருக்கிறது. பிரிஹன்மும்பை மாநகராட்சி (மும்பை மாநகராட்சி – பிஎம்சி) நிர்வாகம் இவ்வாண்டு தொடக்கத்தில், தனது பள்ளிகளை தனியாரிடம் ஒப்படைப்பது என முடிவு செய்தது. பெரிதாக மெச்சிக்கொள்ளப்படும் அரசு – தனியார் கூட்டு (PPP) ஏற்பாட்டின் கீழ் இது நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### மாநகராட்சிப் பள்ளிகள் ஏலம்

இந்தியாவிலேயே நிதி வளம் மிகுந்த மாநகராட்சியான பிஎம்சி, தனது 1,174 பள்ளிகளில், 11,500 ஆசிரியர்களின் மூலமாக, 8 பயிற்று மொழிகளில் சுமார் 4 லட்சம் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வழங்கி வருகிறது. அத்துடன் மனவளர்ச்சி குன்றியவர்களுக்காக 18 பள்ளிகளையும், ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்ட 55 மும்பை பொதுப் பள்ளிகளையும் பிஎம்சி நடத்தி வருகிறது. மாநகராட்சி நிர்வாகம் தனது வருவாயில் 8 சதவீதம் முதல் 9 சதவீதம் வரை கல்விக்காக செலவிடுகிறது. இந்த ஆண்டு ரூ.2,342 கோடி செலவிடத் திட்டமிட்டுள்ளது, இது கடந்த ஆண்டைவிட 65 சதவீதம் அதிகமாகும். மாணவர்கள் ஒவ்வொருக்கும் ஆண்டுதோறும் ரூ.36,750 செலவிடும் இந்த மாநகராட்சி நாட்டிலேயே கல்விக்காக அதிகம் செலவிடும் மாநகராட்சியில் ஒன்றாகும். பிஎம்சி பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுகளில் குறைந்து வந்துள்ளது. 2007 – 08ம் ஆண்டில் 4,20,440 என இருந்த மாணவர்களின் எண்ணிக்கை 2011–12ம் ஆண்டில் 3,85,657 என்பதாகக் குறைந்துவிட்டது. ஏழைகளிலும் ஏழைகளாக இருப்பவர்கள்தான் பிஎம்சி பள்ளிகளுக்குத் தங்களது பிள்ளைகளை அனுப்பி வைக்கிறார்கள். நான்காம் நிலை ஊழியர்கள் கூட, எடுத்துக்காட்டாக பிஎம்சி பள்ளிகளிலேயே வேலை செய்யும் துப்புரவுப் பணியாளர்கள், உதவியாளர்கள் கூட, தங்களது குழந்தைகளை இப்பள்ளிகளுக்கு அனுப்புவதில்லை. “இந்தியாவின் முன்னணி நகரம்” என்று அழைக்கப்படுகிற, இந்தியாவின் முதல் நகரமான மும்பை தேசத்தின் வரிவருவாயில் 33 சதவீதத்திற்கு மேல் பங்களித்திருக்கிறது. நாட்டின் தனிநபர் வருமானத்தில் மிக அதிக அளவான ரூ.65,361 என்ற அளவை எட்டியுள்ளது. இது நாட்டின் சராசரி தனிநபர் வருமானத்தை விட (ரூ.29, 382) இரண்டு மடங்கிற்கும் கூடுதலாகும். இதே நகரத்தில்தான் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஒரு நாளைக்கு ரூ.20க்கும் குறைவாக சம்பாதிக்கிறவர்களாக இருக்கிறார்கள். பெரும்பாலும் பட்டியல் சாதிகளாகவும், பழங்குடி சமூகங்களாகவும், இதர பிற்படுத்தப்பட்டவர்களாகவும், முஸ்லீம்களாகவும், கிறிஸ்துவர்களாகவும் உள்ள இந்த மக்கள்தான் தங்கள் குழந்தைகளை மாநகராட்சிப் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள்.

இந்த ஜனவரி 23 அன்று, பிஎம்சி நிர்வாகம், இந்தப் பள்ளிகளில் முக்கிய அங்கம் வகிப்பவர்களான இக்குழந்தைகளின் பெற்றோர்களையோ ஆசிரியர்களையோ கலந்தாலோசிக்காமல், ஏலம் எடுக்க முன் வருகிற தனியாருக்கு இந்தப் பள்ளிகளை ஏலத்தில் விட்டுவிடுவதற்கு முடிவு செய்தது. PPP என்ற கவர்ச்சிகரமான பெயரின் கீழ் இந்த நடவடிக்கைக்கு முடிவு செய்யப்பட்டது. உலக வங்கியும், பன்னாட்டு மேம்பாட்டுத் துறையும் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டது. அரசமைப்பு சட்டப்படி உருவாக்கப்பட்ட ஒரு நிர்வாகம், தனது அரசமைப்பு சாசனக் கடமைகளை கைவிட்டு

தனது பள்ளிகளை தனியாரிடம் ஒப்படைக்க முடிவு செய்தது நாட்டில் இதுவே முதல் முறையாகும். கல்வித்துறையில் “சிறப்பாகச் செயல்பட்ட” சாதனையைச் செய்த அமைப்புகள், கருணை அறக்கட்டளைகள், தனியார் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்போடு ஏழைக் குழந்தைகளுக்கு உயர்ந்த தரமான கல்வி கிடைக்கச் செய்வதுதான் இத்திட்டத்தின் நோக்கம் என்ற தேன் தடவிய வார்த்தைகளோடு இது அறிவிக்கப்பட்டது.

நன்றாகக் காலூன்றிய பெரும் வர்த்தக நிறுவனங்களுக்கு இந்தப் பள்ளிகள் ஏலம் விடப்படும். அந்த நிறுவனங்கள், “தொழில்நுட்பம் அல்லது கல்வித்துறையில்” சிறப்பாகப் பணிபுரிந்ததாக அறியப்பட்டுள்ள நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளும் இந்த நடைமுறைகளெல்லாம், தற்போது ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியமைப்புக்கும் (யூனிசெப்), மாநகராட்சி நிர்வாகத்திற்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் நிர்வகிக்கப்படும்.

“பள்ளி உயர்வு திட்டம்” என்பதாக அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளது. (யூனிசெப் மற்றும் மெக்கன்சி அன்டு கம்பெனி) இரண்டும் சேர்ந்து 2009ல் இந்தத் திட்டத்தை தொடங்கின. இதன் நிர்வாகக் குழுவில் அகன்க்ஷா, ஆசீமா, நந்தி ஃபவுண்டேஷன் போன்ற NGOக்கள் இடம் பெற்றுள்ளன). தரமான கல்வியை ஏன் வழங்க முடியவில்லை என்பதற்கு மாநகராட்சி நிர்வாகம் எந்த ஒரு காரணத்தையும் தெரிவிக்கவில்லை.

125 ஆண்டுக்கு மேல் அனுபவம் இருந்தும், தன்னால் செய்ய முடியாததை, சந்தேகத்திற்குரிய பின்னணிகள் கொண்ட தனியார் கூட்டாளிகளால் செய்ய முடியும் என்ற தனது முடிவுக்கான நியாயங்களையும் நிர்வாகம் வெளிப்படுத்தவில்லை. தனது பள்ளிகளில் ஒன்றை ஒரு NGO அமைப்புதான் நடத்தி வருகிறது என்ற நிலையில், அதிலிருந்து கிடைத்த எதிர்மறை அனுபவத்தையும் மாநகராட்சி கணக்கில் கொள்ளவில்லை. உதாரணமாக பள்ளி உயர்வுத் திட்டக் குழுவில் இடம் பெறும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த அகன்க்ஷா அமைப்பு, மும்பை நகரின் காட்டன் கிரீன் பகுதியில் நடத்துகிற பள்ளியில் முதல் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை பாடங்களை நடத்துவதற்கு பயிற்சி பெற்ற ஒரே ஒரு ஆசிரியர்தான் இருக்கிறார். 'டீச் இந்தியா ப்ராஜக்ட்' எனப்படும் திட்டத்திலிருந்து தனக்குத் தேவையான ஆசிரியர்களை அந்த அமைப்பு எடுத்துக்கொண்டுள்ளது. பல்வேறு தொழில் நிறுவனங்களின் ஊழியர்கள் ஒரு விடுமுறைக் கால ஏற்பாடாக பள்ளிகளில் கற்றுக்கொடுக்க உருவாக்கப்பட்டதே அந்தத் திட்டம்.

### பொது நிதியில் தனியார் லாபம்:

அரசு – தனியார் கூட்டு என்பது அடிப்படையில் ஒரு புதிய கருத்தாக்கம் அல்ல. ஆனால், பொது மக்களின் எதிர்ப்பு இல்லாமல் தனியார் மயமாக்குவது என்ற நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டுள்ள இந்த அரசு – தனியார் கூட்டு ஏற்பாடு, நவீன தாராளமயவாதிகளின் புத்திசாலித்தனத்தில் பிறந்ததுதான். இந்த ஏற்பாட்டின் கீழ் தேவைப்படுவதெல்லாம் அரசாங்கம் திரும்பத் திரும்ப அடித்தட்டு மக்களின் முன்னேற்றம் பற்றியும் நிதிப் பற்றாக்குறை குறித்தும் போதுமான உற்பத்தித் திறனை அடையத் தவறிவிட்டது பற்றியும் சொல்லிக்கொண்டே இருப்பதுதான். நிதிப்பற்றாக்குறைக்கு அப்பால் வலியுறுத்தப்படுகிற முக்கியமான கருத்து ஏதோ தனியார் துறைதான் மிகவும் செயல்திறன் வாய்ந்தது என்பதாகும். உலகம் முழுவதுமே ஆட்சியாளர்களின் ஆதரவை இந்த PPP ஏற்பாடு பெற்றுள்ளது. ஏனென்றால், பெரும் அளவிலான பொது நிதியை, ஒப்பந்தங்களின் ஓட்டைகள் வழியாக அவர்கள் ஆதாயம் அடைவதற்குத் தோதாக தனியாருக்கு மாற்ற இந்த ஏற்பாடு உதவிகரமாக இருக்கிறது. சமீபத்திய ஆண்டுகளில் பெரும்பாலான உள்கட்டுமான திட்டங்களுக்கு எடுத்த எடுப்பிலேயே PPP ஏற்பாடுதான் கையாளப்படுகிறது.

இந்தியாவில் இந்த PPP என்பது 1999ல் பாரதீய ஜனதா கட்சியின் தேர்தல் அறிக்கையிலும் அதன் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அறிக்கையிலும்தான் முதன் முதலில் இடம் பெற்றது. அப்போது பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் அலுவலகத்தில், பல்வேறு துறைகளிலும் PPP முறையை கொண்டுவருவதற்காக என ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. பின்னர், அந்தக் குழு திட்டக் குழுவிற்கு மாற்றப்பட்டது. 2004ல் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்கு வந்தபோது இதே குழு அப்படியே நீடித்து, பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தனது அறிக்கையை தாக்கல் செய்தது. 2007 செப்டம்பரில் திட்டக்குழுவின் ஒரு கூட்டத்திற்கு தலைமை தாங்கிய மன்மோகன் சிங், கல்வியில் அனைத்து மட்டங்களிலும் PPP முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தார். அதன்பின், 11வது, 12வது ஐந்தாண்டு திட்டங்களின்போது, கல்வித்துறையின் பொதுச் சொத்துக்களை கைப்பற்றுவதற்கு பெரும் வர்த்தக நிறுவனங்களும் NGOக்களும் மத நிறுவனங்களும்

போட்டி போட்டன. தனியார் நிறுவனங்களுக்கு அரசு காட்டிய பரிவு நடவடிக்கைகள் பல. இலவசமாகவோ அல்லது மிகவும் குறைந்த விலையிலோ நிலங்களை வழங்குவது, குறைந்த கட்டணத்தில் மின்சாரம், தண்ணீர், பேருந்து சேவைகள், வருமான வரிச் சலுகைகள், எஸ்.சி/எஸ்.டி சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான கட்டணங்கள், வெளியாட்களை ஏற்பாடு செய்துகொள்வதற்கான பெரும் வாய்ப்புகள் உள்ளிட்டவை அந்த பரிவுகளில் அடங்கும். இவ்வளவு பெரிய பொது சொத்துகள் யாருக்குப் போய் சேர்ந்தன என்பது குறித்த ஆய்வு எதனையும் தனியார் நிறுவனங்கள் செய்திருப்பதாக தெரியவில்லை. ஏனென்றால், மும்பை மாநகராட்சியின் 11,500 பள்ளிகளின் சொத்து மதிப்பு பல 1,000 கோடி ரூபாய்களைத் தாண்டும்.

தனியார் கல்வி என்பது நாட்டில் பல ஆண்டுகளாகவே இருந்து வருகிறது என்ற போதிலும் தரமான கல்விக்கான தனித்துவமான அமைப்புகள் பொதுத்துறையில்தான் இருந்து வந்துள்ளன. இத்தனை தனியார் நிறுவனங்கள் இருந்தபோதிலும் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் (ITI), இந்திய நிர்வாகவியல் நிறுவனம் (IIM) அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனம் (AIIMS) ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம், டில்லி பல்கலைக்கழகம் போன்ற, ஒரு கல்வி அமைப்பைக் கூட தனியார் நிறுவனங்களால் ஏற்படுத்த முடியவில்லை. நவீன தாராளமய கூச்சல்களின் நடுவே, 1970ம் ஆண்டுகளின் தொடக்கக்கட்டம் வரையில், தரமான கல்வி அரசு நிறுவனங்களில் மட்டுமே கிடைத்து வந்தது என்பதை ஒப்புக்கொள்ளக்கூட மறுக்கிறார்கள். அரசியல் போட்டி அதிகரித்ததன் விளைவாகத்தான், பள்ளிகளின் கல்வி சார்ந்த சுயேச்சைத் தன்மையில் அத்துமீறல்கள் நடந்தன. அரசியல் தலைவர்களுக்கு தொண்டூழியம் செய்பவையாக கல்வி நிறுவனங்கள் மாறின. இதே மும்பை மாநகராட்சிப் பள்ளிகள் தரமான கல்விக்குப் புகழ்பெற்றவையாக இருந்தவைதான்.


www.womendeliver.org

புகழ்பெற்ற பலரும் இந்தப் பள்ளியிலிருந்து உருவானவர்கள்தான். புதுதில்லியில் உள்ள தேசிய கல்வித் திட்டம் மற்றும் நிர்வாகவியல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஜே.பி.ஜி. திலக், 11வது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் PPP வழியில் 2500 மாதிரிப் பள்ளிகளை அமைக்கும் திட்டம் குறித்து ஆய்வு செய்தார். PPP என்பது தனியார் மயமாக்குவதற்காகவோ, லாப நோக்கத்தை ஊக்குவிப்பதற்காகவோ அல்ல என்று கூறப்படும் வாதத்தை நிராகரித்த அவர், அதற்கு எதிரான விளைவுதான் ஏற்படும் என்று தனது ஆய்வு முடிவில் கூறினார். தனியார்மயமாவதும், மிக உயர்ந்த அளவில் வர்த்தகமயமாவதும்தான் நடக்கும். ஒரே வித்தியாசம், அதற்காக பொது மக்களின் பணம் பயன்படுத்தப்படும் என்றார் அவர் (தி ஹிண்டு, 2010 மே 24).

**வர்த்தக சேவை அல்ல:**

நவீன தாராளமய வெறித்தனங்கள் ஒரு காலத்தில் பொதுச் சேவைகளாக இருந்தவற்றையெல்லாம் வர்த்தக சரக்குகளாக மாற்றிவிட்டன. மூலப் பொருள்களாக இருக்கும் இளைஞர்களை, தனது முதலாளித்துவ எந்திரத்திற்கான இடுபொருள் போன்ற கூலித் தொழிலாளிகளாக மாற்றுவதற்கான வர்த்தக சேவையாக அது கல்வியைப் பார்க்கிறது. ஆனால், கல்வி போதனை என்பது, அப்படியெல்லாம் கருத முடியாத மிக உயர்வான ஒன்றாகும். சமுதாய மாற்றத்திற்கான ஒரு கருவிதான் கல்வி என உலகம் முழுவதுமே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. நமது முன்னோர்கள் கல்வியை ஒரு சமநிலைப்படுத்தும் கருவியாகப் பார்த்தனர். ஆகவேதான் அதனை நமது அரசமைப்பு சாசனத்தில் ஒரு அடிப்படை உரிமையாகச் சேர்க்க வேண்டுமென அவர்கள் விரும்பினர். ஆனால், ஒரு கெடு வாய்ப்பாக அவர்களால் அதனைச் செய்ய முடியாமல் போனது. கல்வி என்பது வழிகாட்டும் நெறிமுறைகளில் ஒன்றாகவே இருந்துவிட்டது (அரசின் சட்டப்பூர்வ கடமையாக வலியுறுத்தப்படவில்லை). எனினும், 14 வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் 10 ஆண்டுகளுக்குள் கல்வி வழங்கியாக வேண்டும் என்ற ஒரு காலக் கெடுவை அவர்கள் நிர்ணயித்தனர். ஆனால், நமது ஆட்சியாளர்கள், உச்சநீதிமன்றத்தால் உலுக்கப்படும் வரையில் இந்தக் காலக்கெடுவை கண்டுகொள்ளவே இல்லை. 1993ல் உன்னிகிருஷ்ணன் வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம் கல்வியை வாழ்க்கைக்கான அடிப்படை உரிமைகளில் ஒன்றாக, அரசமைப்பு சாசனத்தின் 21வது சட்டப்பிரிவின் கீழ் சேர்க்க வேண்டும் என ஆணையிட்டது.

ஆனால், 2009ல் அரசு நிறைவேற்றிய கல்வி உரிமைச் சட்டமானது ஒரு தந்திரமான ஏற்பாடாகவே இருக்கிறது. மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய 0–6 வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகளை விலக்கி வைத்ததன் மூலமாகவும், பல அடுக்கு கல்வி முறையை சட்டப்பூர்வமாக அங்கீகரிப்பதன் மூலமாகவும் அரசமைப்பு சாசனத்தின் அந்த உணர்வை கல்வி உரிமைச் சட்டம் மீறுகிறது. அதுமட்டுமல்லாமல்,

கர்ப்பிணிப் பெண்களிடையே ஊட்டச்சத்தின்மை பிரச்சனை கவலையளிக்கக் கூடிய வகையில் மிக அதிகமாக இருக்கும் நிலையில், அவர்களுக்கு முறையான சுகாதார கவனிப்புகளை வழங்க வேண்டியது அரசின் கடமையாகும். அதன் மூலமே எந்த ஒரு குழந்தையும் பிறவியிலேயே இயலாமையுடன் பிறப்பதைத் தடுக்க முடியும்.

நாட்டில் அமைக்கப்பட்ட முதலாவது கல்வி ஆணையமான கோத்தாரி ஆணையம் (1964 – 66) நாட்டின் எதிர்பார்ப்புகள் நிறைவேற வேண்டுமென்றால், மக்களின் அறிவு, திறமை, அக்கறை, மாண்பு ஆகியவற்றில் ஒட்டுமொத்தமான மாற்றங்கள் தேவை என்று கூறியது. இந்தியாவுக்கு மிகவும் தேவைப்படுகிற சமுதாய மேம்பாட்டிற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்குமான ஒவ்வொரு திட்டத்திற்கும் இதுவே அடிப்படையாகும். “வன்முறைப் புரட்சி இல்லாமல் (அது தேவைப்படும் நிலையில் கூட) இந்த மாற்றம் மிகப்பெரும் அளவில் நிகழ வேண்டுமென்றால் அதற்குப் பயன்படக்கூடிய ஒரு கருவி, ஒரே கருவி, கல்விதான்,” என்று கோத்தாரி ஆணையம் ஒரு ஆழமான கருத்தை தெரிவித்தது. அரசமைப்பு சாசனத்தின் உணர்வை உள்வாங்கிக்கொண்டு, அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒரு பொதுவான அருகமைப் பள்ளி முறையின் மூலமாக இலவச, கட்டாய கல்வி வழங்கப்பட வேண்டும் என்றும் அந்த ஆணையங்கள் வலியுறுத்தியது. இந்த சாதாரணமான ஆணையை ஆட்சியாளர்கள் நிறைவேற்றியிருந்தால், இந்தியாவின் பல கேடுகள் முடிவுக்கு வந்திருக்கும். எந்த ஒரு குழந்தையும் ஊட்டச்சத்தின்மைக் காரணமாக இயலாமையுடன் பிறக்காது என்பதையும் எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியான கல்வி கிடைக்கும் என்பதையும் அரசு உறுதிப்படுத்தியிருக்குமானால் இட ஒதுக்கீட்டிற்கோ, அதன் மூலம் சட்டப்பூர்வமான சாதிகளுக்கோ தேவை ஏற்பட்டிருக்காது என்று கூட நான் வாதிடுவேன்.

(ஆனந்த் டெல்டும்டே ஒரு எழுத்தாளர்,
சமூக உரிமைப் போராளி,
மும்பையில் உள்ள ஜனநாயகப் பாதுகாப்புக்
குழுவில் இயங்கி வருபவர்)

**ஆதாரம்:** ***2013 June 8 Vol XLVIII No. 23***
***EPW 'Economic & Political Weekly'***

## பள்ளி துவங்கிய நாளிலேயே அவமானம்...
## வெளியேற்றப்பட்ட தலித் மாணவர்கள்

ஆண்டின் துவக்க நாளன்று பள்ளி சென்ற தலித் மாணவர்களுக்கு கட்டணம் செலுத்துவதற்கான கடிதம் வரவில்லையென்று பள்ளி நிர்வாகம் வெளியேற்றிய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர் கிறித்துவ மாணவ மாணவியர்கள் வட்டாரத்திற்கு ஒரு மாணவ மாணவியர் என்ற வீதம் 6ஆம் வகுப்பில் சேர்ந்து தொடர்ந்து 12ஆம் வகுப்பு வரை படிப்பதற்கான செலவினத்தை அரசே ஏற்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மதுரை கீழவாசல் பகுதியில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் பயிலும் 13 மாணவர்கள் தங்கள் பெற்றோருடன் திங்களன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் அளிக்க வந்தனர்.

**இது குறித்து பாதிக்கப்பட்ட மாணவர்கள் கூறியதாவது:** எங்களுக்கான கல்வி கட்டணம், விடுதிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் மாவட்ட நிர்வாகம் மூலம்தான் இதுவரை செலுத்தப்பட்டு வந்தது. இந்த கல்வியாண்டு துவக்கத்தில் பள்ளிக்குச் சென்ற எங்களிடம், உங்களுக்கு கல்வி கட்டணம் செலுத்துவதற்கான தகவல் வரவில்லை. ஆகையால், கட்டணத்தை செலுத்திவிட்டு பள்ளிக்கு வரச் சொல்லிவிட்டார்கள். தலித் மாணவர்களான நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு படிக்கிறோம். எங்கள் பெற்றோர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நகையை அடகு வைத்துப் படிக்க வைக்கும் அளவிற்கு அவர்களுக்கு சக்தியில்லை. கடந்த கல்வியாண்டில் மாவட்ட கல்வி அலுவலர் சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியரிடம் எங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதற்கான உத்தரவுகளை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலம் அனுப்பி வைத்தனர். ஆனால், இந்த ஆண்டு அப்படி அனுப்பாத காரணத்தால் பள்ளி துவங்கிய முதல் நாளே நாங்கள் வெளியேற்றப்பட்டுள்ளோம் என அவர்கள் கண்ணீருடன் கூறினர். இது தொடர்பாக மாணவர்களின் பெற்றோர்கள், கோரிக்கை மனுவை அளித்தனர். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிற்படுத்தப்பட்ட நலத்துறையினர் கூறியுள்ளனர்.

**– தீக்கதிர், 11.6.2013**

## சுருக்கம்

# இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ன் படி நலிவடைந்த பிரிவினருக்கான 25% இடஒதுக்கீடு பள்ளிகளில் நடைமுறைப்படுத்துதல் – சார்பாக

அனைத்து சுயநிலைப்பள்ளிகளிலும் (சுயநிதி சிறுபான்மை பள்ளி நீங்கலாக) நலிவடைந்த, வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பிரிவினருக்கான 25% இடஒதுக்கீட்டை அளிப்பதற்கான நடைமுறைகள் வகுக்கப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வி – குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 – வாய்ப்புகள் மறுக்கப்பட்ட / நலிவடைந்த பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு சிபிஎஸ்இ / ஐசிஎஸ்இ உள்ளிட்ட அனைத்து தனியார், சிறுபான்மையினர் அல்லாத, அரசு உதவி பெறாத பள்ளிகளிலும் 25% இடஒதுக்கீடு – வழிகாட்டல்கள் – பிறப்பிக்கப்பட்ட ஆணைகள்.

**பள்ளிக் கல்வி (X2) துறை**

அரசாணை (நிலை) எண்.60

தேதி 01.04.2013
திருவள்ளுவர் ஆண்டு 2044
பங்குனி 19

**காணல்:**

(1) அரசாணை (நிலை) எண்.271, பள்ளிக்கல்வி (X2) துறை, தேதி 25.10.2012

(2) இவர்களிடமிருந்து: மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர் மற்றும் மாநில தலைமை உயரதிகாரி, சென்னை – 6 Rc.எண். 5210/A1 / 2013, தேதி: ––.03.2013

*****

**ஆணை:**

குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 பிரிவு 12(1) (C)ன்படியும், தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச, கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011ன் விதி 8 மற்றும் 9ன் படியும், அருகாமைப் பள்ளிகள் விதிகளின் அடிப்படையில், வாய்ப்புகள் மறுக்கப்பட்ட மற்றும் நலிந்த பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு பள்ளி நுழைவு வகுப்பில் 25% இடஒதுக்கீடு வழங்குவது சட்டப்பூர்வமானதாகும். இந்த விதியின் கீழ், அவர்கள் சேர்க்கப்படுகிற பள்ளியிலிருந்து முறையை 1 கி.மீ அல்லது 3 கி.மீ எல்லைக்குள் வீடு இருக்கக்கூடிய மேற்படி பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகள், தொடக்க நிலை மற்றும் மேல் நிலைத் தொடக்க வகுப்புகளில்.

2. மேற் குறிப்பிட்டுள்ள முதல் அரசாணையின்படி, குழந்தைகளுக்கான இலவச, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 பயனளிக்கும் வகையில் செயல்படுத்தப்படுவதை கண்காணிப்பதற்காக மாநில தலைமை உயர் அதிகாரியாக மெட்ரிகுலேன் பள்ளிகள் இயக்குநரும் மேலும் 5 உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டனர்.

3. குழந்தைகளுக்கான இலவச, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ன் கீழ் வாய்ப்புகள் மறுக்கப்பட்டோர் / நலிவடைந்த பிரிவினருக்கான 25% இடஒதுக்கீடு செயல்படுத்தப்படுவதற்காக சில ஆணைகளை மாநில தலைமை உயர் அதிகாரி / மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர் முன் வைத்துள்ளார்.

4. மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின் ஆலோசனையை கவனமாக பரிசீலித்தபின், குழந்தைகளுக்கான இலவச, கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009ன்படி வாய்ப்புகள் மறுக்கப்பட்டோர் / நலிந்த பிரிவினருக்கான 25% இடஒதுக்கீடு பயனுள்ள வகையில் செயல்படுத்தப்படுவதற்காக பின்வரும் வழிகாட்டல்களை அரசு பிறப்பிக்கிறது.

(i) 1. ஒவ்வொரு பள்ளியும் நுழைவுக்கட்ட வகுப்பு மற்றும் சேர்க்கைத் திறன் (எவ்வளவு பேரை சேர்க்க முடியும்) குறித்த விவரங்களைத் தயாரிக்க வேண்டும்.

2. சேர்க்கைத் திறனில்25% கணக்கிடப்பட வேண்டும்.

3. இங்கு, வகுக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின் பற்றி 25% இட அனுமதிகள் நிரப்பப்பட வேண்டும். இந்த இடங்களை ஒதுக்கீடு செய்யுமாறு பள்ளிகளுக்கு ஆணையிடப்பட வேண்டும், அது பள்ளியின் அறிவிப்புப் பலகையில் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும்.

4. இதனை ஒரே சீரான முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக, துறையினால் வடிவமைக்கப்பட்ட ஒரு விண்ணப்பப்படிவம் அனைத்துப் பள்ளிகளுக்கும் சுற்றுக்கு விடப்படுகிறது.

5. துறையினால் நிர்ணயிக்கப்பட்டபடி விண்ணப்பப் படிவங்கள் வெளியிடப்படும் தேதி / விண்ணப்படிவம் தாக்கல் செய்யப்படும் தேதி ஆகியவை அனைத்து பள்ளிகளின் அறிவிப்புப் பலகைகளிலும் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும்.

6. நெறிமுறைகளின்படி தகுதி உள்ள படிவங்கள் பரிசீலனைக்குப் பிறகு கண்டறியப்பட வேண்டும்.

7. தகுதியற்றவை என்று அறிவிக்கப்படும் விண்ணப்பங்கள் மீது மேல்முறையீடு செய்வதற்கான ஒரு பொருத்தமான குறைதீர்ப்பு ஏற்பாடு உருவாக்கப்பட வேண்டும்.

8. தகுதி உள்ள விண்ணப்பங்கள் சேர்க்கைத் திறனைவிட அதிகமாக இருக்கும் பட்சத்தில், தோராய (Random) தேர்வுமுறை பின்பற்றப்பட வேண்டும். தேர்வு செய்யப்பட்ட குழந்தைகளின் பட்டியல் அறிவிப்புப் பலகைகளில் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் சம்மந்தப்பட்ட ஆய்வு அலுவலரிடம் விவர அறிக்கை தாக்கல் செய்ய பள்ளிகளுக்கு ஆணையிடப்பட வேண்டும்.

9. குழந்தைகள் தொடர்ந்து பள்ளிக்கு வருவதை கண்காணிப்பதற்காக, பள்ளியிலிருந்து குறிப்பிட்ட கால இடைவெளியிலான வருகை அறிக்கை வழங்க பணிக்கப்பட வேண்டும்.

10. 25% இடஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கப்படும் குழந்தைகள் சட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளபடி, மற்ற குழந்தைகளிடமிருந்து எவ்வகையான பாகுபாட்டிற்கும் உட்படுத்தப்படக் கூடாது.

(ii) மேற்கண்ட பணிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பணி முறைப்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

(iii) இதுதொடர்பாக, பள்ளிகளிடமிருந்து விவரங்களை பெறுவதற்காக / சேகரிப்பதற்காக படிவ மாதிரிகள் இணைக்கப்பட்டுள்ளன.

(iv) மேற்கூறிய சேர்க்கை நடைமுறைகள் மே மாத இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என்பதால் சேர்க்கை நடைமுறையை செயல்படுத்துவதற்கான இணைப்பில் உள்ள கால அளவு, கறாராகப் பின்பற்றப்பட வேண்டும்.

5. பள்ளிக் கல்வி இயக்குநர், மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் ஆகியோர் இந்த ஆணைகளைத் தங்களது அதிகார எல்லைக்குட்பட்ட அனைத்து பள்ளிகளுக்கும் தெரிவிக்க வேண்டும், இந்த ஆணையை சட்டப்பூர்வமாகவும் உணர்வுப்பூர்வமாகவும் உண்மையாக நிறைவேற்ற வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படவேண்டும். குழந்தைகளுக்கான இலவச, கட்டாயக் கல்வி உரிமை விதிகள் 2011 செயல்படுத்தப்படுவதற்கான மேற்கூறிய வழிகாட்டல்களை கண்காணிக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநர் ஆணைப்படி)

டி. சபிதா,
அரசின் முதன்மைச் செயலர்,

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை – 6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை – 6
மாநிலத் தலைமை உயர் அதிகாரி /
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை – 6

//ஆணைப்படி அனுப்பி வைக்கப்படுகிறது//

பிரிவு அலுவலர்

அரசாணை (நிலை) எண். 60க்கான இணைப்பு, பள்ளிக் கல்வி (X2) துறை

தேதி: 01.04.2013

இணைப்பு –1

**கல்வி உரிமைச் சட்டம், 2009ன் கீழ் சிறுபான்மையினர் அல்லாத அரசு உதவி பெறாத தனியார் பள்ளிகளில் சேர்க்கைக்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டோர் / நலிந்த பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு 25% இடஒதுக்கீட்டை செயல்படுத்த வேண்டிய நடைமுறைகள்**

| வ.எண். (1) | நிகழ்வுகள் (2) | தோராய தேதி (3) |
|---|---|---|
| 1. | ஒவ்வொரு பள்ளியும் நுழைவுக் கட்ட வகுப்பு மற்றும் சேர்க்கைத் திறன் குறித்த விவரங்களை தயாரிக்க வேண்டும் | ஒவ்வொரு ஆண்டு ஏப்ரல் 2 |
| 2. | 18.01.2011 தேதியிட்ட பள்ளிக் கல்வி (C2) துறை அறிவிக்கை எண். அரசாணை (நிலை) எண்.9ன் படி 25% சேர்க்கை, ஒரு தனி பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு மாவட்டக் குழுவிற்கு படிவம் 1ல் குறிப்பிட்டுள்ளபடி தாக்கல் செய்யப்பட வேண்டும். | ஒவ்வொரு ஆண்டு ஏப்ரல் 2 |
| 3. | இந்த 25% சேர்க்கை, பள்ளியின் அறிவிப்புப் பலகையில் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும். | ஒவ்வொரு ஆண்டு ஏப்ரல் 2 |
| 4. | அரசு உதவி பெறாத சிறுபான்மையினர் பள்ளிகளைத் தவிர தனியார் பள்ளிகளில் 25% இடஒதுக்கீட்டில் குழந்தைகளின் சேர்க்கைக்கான விண்ணப்பப்படிவமானது. படிவம் 2ல் உள்ளபடி இருக்க வேண்டும் | |
| 5. | அரசு உதவி பெறாத சிறுபான்மை பள்ளிகள் தவிர்த்து ஒவ்வொரு தனியார் பள்ளியும் 25% இடஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவங்கள் குறித்து அறிவிக்க வேண்டும். | ஒவ்வொரு ஆண்டு மே 2 |
| 6. | விண்ணப்பப் படிவங்கள் வழங்குவதற்கான தேதி | ஒவ்வொரு ஆண்டு மே 3 முதல் மே 9 வரை |
| 7. | நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தாக்கல் செய்தல் | ஒவ்வொரு ஆண்டும் மே 9 அல்லது அதற்கு முன் மாலை 5 மணி வாக்கில் |
| 8. | பெற்றோர்கள் படிவம் – 3ல் உள்ளபடி விண்ணப்பப் படிவங்களை தாக்கல் செய்யும்போது ஒரு பதிவுச் சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். | |
| 9. | தகுதி உள்ள விண்ணப்பதாரர்களின் பெயர்கள் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும். தகுதியற்ற விண்ணப்பதாரர்களின் பெயர்களும், நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்தோடு தனியாக காட்சிக்கு வைக்கப்பட வேண்டும். | ஒவ்வொரு மே 11 மாலை 5 மணி வாக்கில் |
| 10. | தகுதி உள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 25% சேர்க்கையைவிட அதிகமாக இருக்குமானால், விண்ணப்பதாரர்களின் எண். வரிசை அடையாள வில்லைகளுடன் தோராய தேர்வு முறை பின்பற்றப்பட வேண்டும். ஆர்வமுள்ள பெற்றோர்கள் தோராயத் தேர்வு முறையில் பங்கெடுக்கலாம் | ஒவ்வொரு ஆண்டு மே 14 காலை 10.30 மணிக்கு |
| 11. | 25% ஒதுக்கீட்டிற்குள் 10% காத்திருப்புப் பட்டியலுடன், தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களின் பெயர்கள், அவர்களது விண்ணப்ப எண்களுடன் உடனடியாக அறிவிப்புப் பலகையில் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும். | ஒவ்வொரு ஆண்டும் மே 14 பகல் 2 மணி |
| 12. | படிவம் 4ல் உள்ளபடி சேர்க்கை நடைமுறையை முடித்துக்கொண்ட பின் சம்பந்தப்பட்ட மாவட்ட அளவிலான அதிகாரியிடம் பள்ளிகள் விவர அறிக்கை அளிக்க வேண்டும். | ஒவ்வொரு ஆண்டும் மே 20 அல்லது அதற்கு முன் |

(குறிப்பு: மூன்றாவது கட்டத்தில் (3) குறிப்பிடப்பட்டுள்ள தேதிகள் அரசு விடுமுறை நாளாக இருக்குமானால், அதற்கடுத்த பணி நாள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்)

**பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள்**

1. நுழைவுக் கட்ட வகுப்பில் சேர்க்கப்படும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை
2. 25% ஒதுக்கீட்டின் கீழ் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை (பெயர் பட்டியலுடன்)
3. 25% ஒதுக்கீட்டின் கீழ் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல் (சேர்க்கைப் பிரிவு)
4. ஈட்டுத் தொகை கோரிக்கை பதிவேடு

(ஒப்பம்)XXXX
அரசின் முதன்மைச் செயலர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

# இந்தியா: வீட்டு வேலைக்காரர்களாக உள்ள குழந்தைகள் சந்திக்கும் அடிமைத்தனம், அவமதிப்பு, சில நேரங்களில் பாலியல் வன்கொடுமை

– 2013 ஜனவரி 19

ஒரு கிழக்கு இந்திய மாநிலத்தின் வறுமையான கிராமத்திலிருந்து, புதுதில்லியில் ஒரு வீட்டு வேலைக்காரியாக வந்தால் நல்ல வருமானம் கிடைக்கும் என்று வாக்களித்து கொண்டு செல்லப்பட்டபோது அந்தப் பெண்ணின் வயது 14. ஒரு பணக்கார நடுத்தரவர்க்க வீட்டில் கிட்டத்தட்ட ஒரு அடிமையாகவே வேலை செய்யும் நிலைமைக்கு அவர் தள்ளப்பட்டார்.

வேலையில் சேர்த்துவிட்ட ‘‘வேலைவாய்ப்பு ஏஜென்ட்’’ இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து தனது நிலைமை குறித்து புகார் செய்யும் தைரியம் அந்தப் பெண்ணுக்கு வந்தது. ஆனால், அவ்வாறு புகார் செய்தபோது, ‘‘அவன் என்னை அடித்தான் பிறகு வன்புணர்ச்சியும் செய்தான்,’’ என்று தலைநகர் தில்லியில் அளித்த பேட்டியில் அந்தப் பெண் கூறினார். இன்று அவருக்கு வயது 17. ‘‘அந்த வீட்டைவிட்டு ஓடிப்போக முயன்றால், கிராமத்தில் உன் குடும்பத்தினரை கொலை செய்துவிடுவேன், உங்கள் வீட்டையும் எரித்துவிடுவேன் என்று அவன் என்னை மிரட்டினான், என்றும் அவர் கூறினார். ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவின் கிராமப் பகுதிகளிலிருந்து வேகமாக வளர்ந்து வரும் நகரப் பகுதிகளில் உள்ள நடுத்தரவர்க்கக் குடும்பங்களில் வீட்டு வேலையாட்களாக பணியாற்றுவதற்கு என ஆயிரக்கணக்கான பெண் குழந்தைகள் கடத்தப்படுகிறார்கள். உணவு, தங்குமிடம், சட்டப்பூர்வ மாதாந்திர குறைந்தபட்ச கூலியான 125 டாலருக்கும் (சுமார் ரூ.7,500) குறைந்த ஊதியம் ஆகியவற்றுக்காக நாள்தோறும் குறைந்தது 15 மணிநேரம் அவர்கள் அந்த வீடுகளில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. பலரும் தங்களது குடும்பங்களிலிருந்து துண்டிக்கப்படுகிறார்கள். அவமதிப்புக்கு உள்ளாகிறார்கள், அடிமைகளாக நடத்தப்படுகிறார்கள், சிலர் பாலியல் தாக்குதல்களுக்கும் உள்ளாகிறார்கள். கடந்த டிசம்பரில் புதுதில்லியில் ஒரு பேருந்தில் ஒரு இளம் பெண் ஒரு கும்பலின் பாலியல் வன்முறைக்கு உள்ளானபோது இந்தியா கொந்தளித்தது. ஆனால், அதே நகரில், குழந்தைகள் கடத்தப்படுவதும் இத்தகைய அவமதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுவதும், ஒரு பெரிய வலையமைப்பாக தினமும் நடந்துகொண்டுதான் இருக்கிறது என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். சமுதாயத்தின் மறைமுக ஒத்துழைப்போடும், அரசாங்கத்தின் அலட்சியத்தோடும் இது தொடர்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். இந்தியா ஒரு நவீன, முன்னேறிய நாடாக மாற முயன்று கொண்டிருக்கிறது. ஆனால், நாட்டு மக்களின் மிகப் பெரும்பான்மையினர் உயர்ந்து வரும் பொருளாதாரத்தின் பலன்கள் கிடைக்கப் பெறாதவர்களாக ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதையும், ஏழைகளின் உரிமைகள் குறித்து நடுத்தர வர்க்க இந்தியர்கள் பலரும் பொருட்படுத்துவதில்லை என்பதையும் இந்தப் பிரச்சனை நினைவூட்டுகிறது.

‘பச்பன் பச்சாவோ அன்டோலன்’ என்ற குழந்தை உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த புவன் ரிபு, ‘‘வேலை வாய்ப்பு நிறுவனங்கள் என்ற போர்வையில் குழந்தைகள், குறிப்பாகப் பெண் குழந்தைகள் கடத்தப்படுவது என்பது இந்தியாவில் இன்று மிகப்பெரிய திட்டமிட்ட குற்றச் செயலாக நடந்து கொண்டிருக்கிறது. இதில் மோசமான அம்சம் என்னவென்றால், இது வெளிப்படையாக நம் கண் முன்னால் நம் வீடுகளிலேயே நடக்கிறது, இருந்தாலும் அது கண்ணுக்குத் தெரிவதில்லை,’’ என்று கூறுகிறார். புதுதில்லியில் நடந்த அந்த கும்பல் வன்புணர்ச்சி வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள ஆறு பேரில் ஒருவனான 17 வயது சிறுவன், ஒரு வடஇந்திய கிராமத்தின் ஏழைக் குடும்பத்திலிருந்து 11 வயதிலேயே குழந்தைத் தொழிலாளியாக வேலை செய்வதற்காக கொண்டுவரப்பட்டான். தலைநகரில் அவன் ஒரு சாலையோர உணவுக் கடையில் வேலை பார்த்தான், பின்னர் பேருந்து ஓட்டுநரின் உதவியாளனாக வேலை



en.m.wikipedia.org

செய்தான் என்று காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். தலைநகருக்குக் கொண்டுவரப்பட்ட பிறகு அவன் தன் பெற்றோருடனான தொடர்பை இழந்துவிட்டான்.

**வெகுவாக மீறப்படும் சட்டம்**

ஏழைக் குழந்தைகளுக்கு வேலை அளிப்பதன் மூலம் அவர்களது குடும்பங்களுக்கு உதவி செய்வதாக பல நடுத்தரவர்க்க இந்தியர்கள் நினைக்கிறார்கள். ஆனால், இந்தியாவில் கடுமையான குழந்தைத் தொழிலாளர் சட்டங்களைக் கொண்டுவந்துள்ள புதுதில்லி அரசின் ஒரு சட்டத்தின்படி, இவர்கள் சிறையில் அடைக்கப்பட வேண்டும். வீட்டு வேலை என்பது ஒரு ஆபத்தான பணி என்று அந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அத்தகைய பணியில் 18 வயதிற்குக் கீழ்ப்பட்டோரை சேர்ப்பது என்பது, 2009ம் ஆண்டிலிருந்து, ஜாமீனில் வெளிவர முடியாத ஒரு குற்றச்செயலாக ஆக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தச் சட்டம் வெகுவாக மீறப்படுகிறது என்கிறார் ரிபு. பெற்றோர்களோ மனித உரிமை அமைப்புகளைச் சேர்ந்தவர்களோ புகார் செய்தபிறகு காவல்துறையினர், இத்தகைய குறைந்த வயது பணியாளர்களை "மீட்கும் நடவடிக்கைகளை" மிக அறிதாகத்தான் மேற்கொள்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

"அநேகமாக வீட்டு வேலை செய்கிற எல்லோரும் குழந்தைப் பருவத்தினராகவோ அல்லது 18 வயதிற்கு முன் வேலைக்குக் கொண்டுவரப்பட்டவர்களாகவோ இருக்கிறார்கள்," என்கிறார் அவர். பிரச்சனையின் அளவை மதிப்பிடுவதற்கான ஒரு திட்டமிட்ட முயற்சி ஒருபோதும் மேற்கொள்ளப்பட்டதில்லை. சுமார் 50 லட்சம் குழந்தைகள் இந்தியாவில் பல்வேறு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று அரசாங்கம் சொல்கிறது. ஆனால், உண்மையான எண்ணிக்கை அதைவிட 10 மடங்கு கூடுதலாக இருக்கும் என்று சமூகப் பணியாளர்கள் கூறுகிறார்கள். தில்லி காவல்துறையை கண்காணிக்கும் மத்திய உள்துறை அமைச்சகத்தைச் சேர்ந்த ஒரு உயர் அதிகாரி, நாடு முழுவதும் சுமார் 40 லட்சம் குழந்தைகள் வீட்டு வேலை செய்கிறார்கள் என்றும்


*mediavoicesforchildren.org*

புதுதில்லியிலும் அதன் புறநகர் பகுதிகளிலுமாக சுமார் 4,000 வேலைவாய்ப்பு ஏஜென்சிகள் செயல்பட்டு வருவதாகவும் கூறினார். ஆனால், தனது பெயரை வெளிப்படுத்த விரும்பாத அந்த அதிகாரி, இந்தப் பிரச்சனையில் தலையிடுமாறு தனது சக அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ள முடியவில்லை, காரணம் அவர்களில் பலரும் தங்கள் வீடுகளிலேயே குழந்தைகளை வேலைக்கு வைத்திருப்பதுதான் என்று தெரிவித்தார். சில நேரங்களில் இந்த ஏஜென்டுகள் வேலைக்காரர்களைக் கொண்டு வந்துவிட்டதற்கான கமிஷன் தொகையை ஒரே தவணையில் வசூலிக்கிறார்கள். அந்தத் தொகை பெரும்பாலும் அவ்வாறு வேலைக்கு சேர்க்கப்படும் பெண்களின் கூலிகளிலிருந்தே, வீட்டுக்காரர்களால் பிடித்துக்கொள்ளப்படுகிறது. மற்ற நேரங்களில் வீட்டுக்காரர்கள் கூலியை நேரடியாக ஏஜென்டுகளிடமே கொடுக்கிறார்கள். அந்தத் தொகையில் ஒரு பகுதி வேலைக்காரப் பெண்ணுக்குப் போய்ச் சேரும் அல்லது கொஞ்சம் கூட போய்ச் சேராது.

பேட்டி எடுக்கப்பட்ட 18 வயது பெண் ஒருவர், தனது முன்னாள் எஜமானர்கள் பழிவாங்கக்கூடும் என்ற அச்சத்துடன் தனது பெயரை வெளியிட வேண்டாம் என கேட்டுக்கொண்டார். மருத்துவர்கள், வர்த்தகர்களிடம் வேலையில் சேர்ந்து 4 ஆண்டுகள் வரை தனக்கு கூலி என எதுவும் தரப்படவில்லை என்றார் அவர். தில்லி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஒரு வழக்கில் வாக்குமூலம் அளித்த மற்றொரு பெண், தனக்கு மாதம் 45 டாலர் (சுமார் ரூ.2,700) கூலி தரப்பட்டது என்றும், ஆனால் நான்காண்டு காலத்திற்கு சிறைவாசம் போல் அடைக்கப்பட்டிருந்ததாகவும் தனது குடும்பத்தாருடன் தொலைபேசியில் பேசுவதற்குக் கூட ஒருபோதும் அனுமதிக்கப்பட்டதில்லை என்றும் கூறியுள்ளார். தில்லி நிர்வாகத்தினர் இந்தத் தொழிலை முறைப்படுத்துவதற்குக் கட்டாயப்படுத்துகிற ஒரு நடவடிக்கையாக, சமூகப் பணியாளர்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர். வேலையில் சேர்த்துவிட்ட ஏஜென்டிடம் புகார் செய்தபோது தன்னை அவன் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தியதாக அந்தப் பெண் புகார் செய்திருக்கிறார். இத்தகைய பெண்களை தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக, அவர்களது திருமண வாய்ப்புகளை கெடுக்கும் வகையில் அவர்களது "கவுரவத்தை" தட்டிப்பறிப்பதாக, வன்புணர்ச்சியை ஒரு ஆயுதமாக கடத்தல் பேர்வழிகள் பயன்படுத்துகிறார்கள் என்கிறார் ரிபு. "என்னால் வலியைத் தாங்க முடியவில்லை. மயக்கமடைந்து விழுந்துவிட்டேன். கண் விழித்தபோது ரத்தத்திற்கு நடுவில் கிடப்பதை உணர்ந்தேன். நான் அழத்தொடங்கியபோது அந்த ஏஜென்ட் நான் மவுனமாக இருக்காவிட்டால் என்னை வேறு யாருக்காவது

விற்றுவிடப் போவதாகவும் ஒருபோதும் வீட்டுக்கு திருப்பி அனுப்பப் போவதில்லை என்றும் சொன்னான்,'' என்றார் அந்தப் பெண்.பிரச்சனையை சமூகப் பணியாளர்கள் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றதால்தான் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. வீட்டு வேலைக்கான குறைந்தபட்ச வயதை அதிகரிக்க வேண்டும், வீட்டு வேலைக்கு ஆள் கொண்டு வருகிற அமைப்புகள் பதிவு செய்யப்பட வேண்டும் என்று தில்லி அரசுக்கு தில்லி உயர்நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. ஆனால், பதிவு செய்யாததற்கான அபராதம் 50 சென்ட் (சுமார் ரூ. 30) முதல் 5 டாலர் (சுமார் ரூ.300) வரை மட்டுமே விதிக்கப்படுகிறது, பதிவு செய்யப்பட்ட அமைப்புகளை கண்காணிப்பதற்கான ஏற்பாடும் இல்லை என்று சமூகப் பணியாளர்கள் கூறுகிறார்கள்.

இரண்டாண்டு காலமாக கூலி எதுவும் இல்லாமல் வேலை செய்து வந்தார், கிழக்கு மாநிலம் ஒன்றைச் சேர்ந்த 17 வயது சிறுமி. அவரை 'பச்பன் பச்சாவோ அன்டோலன்' அமைப்பைச் சேர்ந்த தொண்டர் ஒருவர் மீட்டார். அந்த ஊழியர் புதுதில்லி ரயில் நிலையத்தில் தன்னை யாரென வெளிப்படுத்திக்கொள்ளாமல் வேலை செய்து வருகிறார். அந்தப் பெண்ணை அழைத்து வந்த ஏஜென்ட், அவரது கிராமத்திற்கு கூட்டிச் செல்வதாக சொல்லியிருக்கிறான். ஆனால், நாட்டின் வர்த்தகத் தலைநகரான மும்பை நகருக்கு கொண்டு செல்லும் நோக்கத்துடன் ரகசியமாக டிக்கட் வாங்கியிருந்தான். அங்கே ஆயுள் முழுவதும் அடிமையாகவோ அல்லது பாலியல் தொழிலிலோ தள்ளிவிடுவதே அவன் நோக்கம். ஓராண்டுக்குப் பிறகு இப்போதும் அந்தப் பெண் புதுதில்லியில்தான், அந்த ஏஜென்டின் கண்ணில் படாமல் பதுங்கியிருக்கிறார். உருவத்தில் சிறியவராக கூச்சம் மிகுந்தவராக தலைமுடி கொண்டைபோல் சுருட்டப்பட்டு துணியால் மறைக்கப்பட்டிருக்கிற அந்த பெண்ணைப் பார்க்கும்போதே, தன்னை இந்த நிலைக்குத் தள்ளிவிட்டவனை கம்பி எண்ண வைக்க வேண்டும் என்ற உறுதி கொண்டிருப்பது தெரிகிறது.

''எனது முதல் ஆசை எனக்கு இப்படியொரு நிலைமையை ஏற்படுத்தியவன் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுதான். அடுத்து எனக்கு உரிய பணம் என் கைக்கு வந்தாக வேண்டும். எனது மூன்றாவது விருப்பம், எங்கள் வீட்டுக்கு பத்திரமாக, ஆரோக்கியமாக திரும்பிச் செல்ல வேண்டும் என்பதுதான்,'' என்று அவர் கூறகிறார்.

**ஆதாரம்:**
**http://www.crin.org/resources/infodetail.asp?ID=30150#**

## சித்ரவதைக்கு உள்ளாகும் சிறுவர்கள் நீதிபதியிடம் நேரடியாக புகார் தரலாம்

சித்ரவதைக்கு உள்ளாகும் சிறுவர், சிறுமியர், மகளிர் கோர்ட்டில் ஆஜராகி, நீதிபதியிடம் நேரடியாக, நேர்ந்த கொடுமைகளை தெரிவித்து, புகார் மனு தரலாம். இதன் மீது, கோர்ட் நேரடி நடவடிக்கை எடுத்து, குற்றவாளிக்கு தண்டனை வழங்க உள்ளது. தமிழகத்தில், ஆரம்பத்தில் கோவை உள்ளிட்ட, நான்கு இடங்களில் மகளிர் கோர்ட் திறக்கப்பட்டது. தற்போது, பல மாவட்டங்களில் மகளிர் கோர்ட் துவங்கப்பட்டுள்ளன. இக்கோர்ட்டில் குடும்ப வன்முறை, வரதட்சணை கொடுமை, பாலியல் துன்புறுத்தல், தற்கொலைக்கு தூண்டுதல், கொலை உள்ளிட்ட வழக்குகளில் பாதிக்கப்படும் பெண்கள் தொடர்பான வழக்குகள் மட்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. கோவை மகளிர் கோர்ட்டில் கடந்த ஆண்டு, 200க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவாகின. கோவை, திருப்பூர், நீலகிரி மாவட்ட வழக்குகள், இக்கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு, தீர்ப்பு கூறப்படுகின்றன. சமீபத்தில், சுப்ரீம் கோர்ட் உத்தரவுப்படி, இக்கோர்ட்டில், 18 வயதுக்கு உட்பட்ட, சித்ரவதைக்கு ஆளாகும் சிறுவர், சிறுமியர் தொடர்பான வழக்குகள் விசாரிக்கப்படுகின்றன. தற்போது, ஆறு வழக்குகள் விசாரணையில் உள்ளன.

பெற்றோரும், மற்றோரும் கொடுமைப்படுத்துதல், உணவு தர மறுத்தல், தூங்க விடாமல் தடுத்தல், படிக்க ஆர்வம் இருந்தும் பள்ளிக்கு அனுப்ப மறுத்தல், பள்ளியில் ஆசிரியர்களும், மற்றவர்களும் கொடுமைப்படுத்துதல், பாலியல் தொல்லை, கொலை மிரட்டல் விடுத்தல் என பல்வேறு துன்புறுத்தல் குறித்து புகார் தரலாம். இப்புகார்களை வழக்கறிஞர் வைத்து, கோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்டியதில்லை. பாதிக்கப்பட்ட மைனர் குழந்தைகள், நேரடியாக கோர்ட்டில் ஆஜராகி, நீதிபதியிடம் புகார் தெரிவிக்கலாம். கோர்ட் புகார் மீது விசாரணை மேற்கொண்டு, உறுதி செய்யப்பட்டால் சரியான தண்டனை வழங்கும். பாதிக்கப்பட்ட சிறுவர், சிறுமியருக்கு சிகிச்சையும், இழப்பீடும் வழங்க உத்தரவிடும். 'கோவை மகளிர் கோர்ட்டில் ஏற்கனவே இரண்டு சிறார் சித்ரவதை வழக்குகள் உள்ளன. தற்போது மேலும், நான்கு வழக்குகள் புதிதாக பதிவு செய்யப்பட்டு உள்ளன. இவற்றின் மீதான விசாரணை விரைவில் துவங்கும்' என, கோர்ட் அலுவலர்கள் தெரிவித்தனர்.

**– தினமலர், 23.6.2013**

# தொட்டிலில் இருந்து சுடுகாட்டிற்கு

**கடந்த 16 மாதங்களில் 52 சிசு மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இந்த ஆண்டில் மட்டுமே 28 சிசு மரணங்கள். அட்டபாடி மலைப் பகுதிகளில் பழங்குடி சமூகங்களின் சிசுக்களைக் கொல்வது எது ?**

**– ஜீமோன் ஜேக்கப்**

இந்த ஆண்டு மே 28ம் தேதியன்று கேரளத்தின் மற்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பருவ மழை தொடங்குவதற்காக ஆவலுடன் காத்திருந்தபோது, பகலயூர் கிராமத்தின் வீரா ஸ்வாமி, வேதனையோடு தனது நான்கு மாத மகனின் இறுதிச் சடங்குகளை நடத்திக்கொண்டிருந்தார். பாலக்காடு மாவட்டத்தில் பழங்குடி மக்கள் மிகுந்த அழகிய அட்டப்பாடி மலைப் பகுதியில் இந்த ஆண்டு நிகழ்ந்த 28வது சிசு மரணம் இது. கடந்த 16 மாதங்களில் இங்குள்ள மக்கள் 52 சிசுக்களை கல்லறைகளில் புதைத்திருக்கிறார்கள்.

பிறக்கிற குழந்தைகள் ஒவ்வொன்றாக மரணமடைந்ததைத் தொடர்ந்து இப்பகுதிகளில் வாழும் சுமார் 30 ஆயிரம் பழங்குடி மக்கள் இது ஏதோ சாபத்தின் விளைவு என்று நினைத்தார்கள். வன தெய்வங்களை மகிழ்விக்க பிரார்த்தனைகளும் சிறப்புப் பூஜைகளும் நடத்தினர். ஆனால், உண்மை நிலவரம் இப்படிப்பட்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட நம்பிக்கைகளிலிருந்து மாறுபட்டது. ஊட்டச்சத்துக் குறைவால் ஏற்படும் குறைப் பிரசவங்களே இதற்குக் காரணம். வெச்சாபதி கிராமத்தில் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளாதவராக இருக்கிறார் புஷ்பா. பிப்ரவரி 1 அன்று அவர் ஆணையிருட்டி மருத்துவமனையில், உரிய காலத்திற்கு முன்பே ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தார். இரண்டு நாட்களுக்குப் பிறகு குழந்தைக்குக் கடுமையான சுவாசக் கோளாறுகள் ஏற்பட்டன. பக்கத்து மாநிலமான தமிழ்நாட்டில், இங்கிருந்து 57 கி.மீ. தொலைவில் உள்ள கோயம்புத்தூர் நகரில் உள்ள மருத்துவமனைக்கு தாயும் குழந்தையும் கொண்டு செல்லப்பட்டனர். ஆனால், மறுநாளே குழந்தை தனது இறுதி மூச்சை விட்டது.

''அது ஒரு குறைமாதக் குழந்தை அதன் எடை 800 கிராம்தான். அது கர்ப்பத்தில் இருந்தபோதே நான் கவனமாக இருந்திருக்க வேண்டும்,'' என்று புலம்புகிறார் பள்ளிப் படிப்பை ஆறாம் வகுப்புடன் முடித்துக் கொண்டவரான புஷ்பா. கர்ப்ப காலத்தில் ஊட்டச்சத்துள்ள உணவுகளை எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பு புஷ்பாவுக்கு இல்லை என்று அவரது பக்கத்து வீட்டுக்காரரான ஜோதிமணி கூறுகிறார். ''புஷ்பாவுக்கு பாலோ முட்டையோ கிடைத்ததே இல்லை. அவளுக்குக் கிடைத்ததெல்லாம் அரசாங்கம் கொடுக்கிற மலிவு விலை அரிசி மட்டும்தான் என்கிறார் உள்ளூர் அங்கன்வாடி பணியாளரான ஜோதிமணி. ''குழந்தையைக் கொன்றது புஷ்பாவின் வறுமைதான்,'' என்கிறார் அவர். புஷ்பாவின் கணவர் மருதாச்சலம் இதை ஒப்புக்கொள்கிறார். ''தினமும் முட்டையும் பாலும் சாப்பிடுவது எங்களுக்குக் கட்டுப்படியாகாது,'' என்கிறார் அவர்.

''நாங்கள் மிகவும் ஏழைகள், தொடர்ச்சியாக எங்களுக்கு வேலை கிடைப்பதில்லை. கோயம்பத்தூர் மருத்துவமனைக்கு புஷ்பாவைக் கொண்டுபோவதற்கே நான் கடன் வாங்க வேண்டியிருந்தது. கடனைத் திருப்பிச் செலுத்த ஆறு மாதங்களாகலாம்,'' என்கிறார் மருதாச்சலம்.

இதற்கு அருகில் உள்ள வெள்ளாகுலம் கிராம மக்களுக்கு கடந்த மார்ச் மாதம் மிகக் கொடுமையானதாகும். இரட்டைக் குழந்தைகள் உட்பட மூன்று குழந்தைகள் இந்த மாதத்தில் மரணமடைந்தன. குழந்தைகளை இழந்த அன்னையரில் ஒருவர் ரங்கீ ராமன். இந்த 26 வயது பெண் கடுமையான ரத்த சோகையால் பாதிக்கப்பட்டிருப்பவர். கடந்த மூன்றாண்டுகளில் மூன்று குழந்தைகளைப் பறிகொடுத்தவர் இவர்.

''2011ல் எனக்கு முதல் பிரசவம் நடந்தது. பிறக்கும்போதே அந்தக் குழந்தை இறந்துவிட்டது. 2012ல் வீட்டிலேயே எனக்குக் குழந்தை பிறந்தது. ஆனால், அதுவும் 2 மணி நேரத்தில் இறந்துவிட்டது. இந்த முறை நான் மருத்துவமனைக்குச் சென்றேன். அங்கு எனக்கு சோதனைகள் நடத்தப்பட்டன. மருந்துகளையும் எடுத்துக்கொண்டேன். மார்ச் 13 அன்று எங்கள் வீட்டிலேயே பெண் குழந்தை பிறந்தது. ஆனால், அதுவும் குறைப் பிரசவமாகிவிட்டது. அதுவும் இறந்துவிட்டது. குழந்தை இல்லாமல் எங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி இல்லை,'' என்கிறார் ரங்கீ.

அவரது அண்டை வீட்டார்களில் ஒருவரான வஞ்சி தனது இரட்டைக் குழந்தைகளை பறிகொடுத்தவர். ரங்கீயைப் போல அல்லாமல் இவர் பாலக்காடு மாவட்ட மருத்துவமனையில் மார்ச் 19 அன்று அந்த இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தார். பின்னர் அவரும் குழந்தைகளும் திரிச்சூர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அந்த இரட்டைக் குழந்தைகள் மார்ச் 25 அன்று மரணமடைந்தன. ரங்கீயின் கணவர் வெள்ளிங்கிரி, ''என் மனைவிக்குக் குறைப் பிரசவம் நடந்தது. குழந்தைகளைக் காப்பாற்ற மருத்துவர்கள் தங்களால் முடிந்த அளவிற்கு எல்லா முயற்சிகளையும்

“ஒரு காலத்தில் நாங்கள் இரும்புச் சத்து மிகுந்த 46 வகை காய்கறிகளையும் சிறுதானியங்களையும் உட்கொண்டு வந்தோம். இன்றைக்கு எங்களுக்குக் கிடைப்பது ஒன்றே ஒன்றுதான். மான்ய விலையில் தரப்படுகிற அரிசி மட்டும்தான். அதிலே எவ்விதமான ஊட்டச்சத்தும் கிடையாது”

மேற்கொண்டனர். ஆனால், ஆறு நாட்களில் குழந்தைகள் இறந்துவிட்டன,'' என்று கூறினார். தங்களது இரட்டைக் குழந்தைகளை பறிகொடுத்த அதிர்ச்சியிலிருந்தும் சோகத்திலிருந்தும் அவர்களால் இன்னும் விடுபட முடியவில்லை. இவ்வாறு அடுத்தடுத்து நிகழ்ந்த சிசு மரணங்கள் கேரளம் உருவாக்கியிருந்த தோற்றத்திற்கு பலத்த அடியாக மாறியுள்ளன. நாட்டின் சுகாதார நிலை குறித்த அளவுகோள்களின் பல்வேறு அம்சங்களில் முன்னணியில் இருந்து வந்த மாநிலம் அது. அண்மையில் வெளியான மாதிரி பதிவு அமைப்பு அறிக்கையின்படி, கேரளத்தின் சிசு மரண விகிதம் (IMR) 1000 பிரசவங்களுக்கு 12 என்பதாக உள்ளது. தேசிய ஐ.எம்.ஆர் 1000 பிரசவங்களுக்கு 44 ஆகும்.

தேசிய சராசரியைவிட அட்டப்பாடி IMR முன்னிலை வகிக்கும் நிலையில், இந்த பழங்குடி வட்டாரத்திற்கு அரசியல் தலைவர்களும் அதிகாரவர்க்கத்தினரும் படையெடுத்தார்கள். பல்வேறு திட்டங்களும் அவசரக் கால நடவடிக்கைகளும் அறிவிக்கப்பட்டன. கர்ப்பிணிப் பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான மருத்துவ சோதனைகளை சுகாதாரத் துறை தொடங்கியது. தீவிர ரத்த சோகை நோயாளிகளுக்கு மருந்துகள் வழங்கப்பட்டன. சிசு மரணங்கள் பழங்குடி வட்டாரத்தின் கடுமையான வறுமை நிலையோடு சம்பந்தப்பட்டவை என்கிறார் பழங்குடி மக்களிடையே பணியாற்றி வரும் கே.ஏ. ராமு. “கடந்த சில ஆண்டுகளில் அட்டப்பாடியில் சிசு மரண விகிதம் கவலையளிக்கும் அளவிற்கு அதிகரித்துவிட்டது. ஆனால், மாவட்ட நிர்வாகமோ சுகாதாரத் துறையோ எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ஊடகங்களும் கூட இந்தப் பிரச்சனையை வெளிப்படுத்தவில்லை,'' என்கிறார் அவர்.

2012ல் தான் மேற்கொண்ட ஒரு ஆய்வில், 2011 ஜனவரி முதல் 2012 ஜூன் வரை அட்டப்பாடியில் 776 மரணங்கள் நடந்ததாக தெரியவந்தது என்கிறார் அவர். இறந்தவர்களில் கிட்டத்தட்ட 70 சதவீதத்தினர் பழங்குடியினர். இறந்துப் போனவர்களில் 90 சதவீதத்தினர் 35–45 வயதுப் பிரிவினராவர் என்பது ஒரு முக்கியமான கண்டுபிடிப்பு. “இதே காலகட்டத்தில் இந்த வட்டாரத்திலிருந்து 519 பிறப்புகள் மட்டுமே பதிவாகியுள்ளன. நிகழ்ந்துள்ள சாவுகள் பெரும்பாலானவற்றுக்குக் காரணம் பட்டினிதான்,'' என்கிறார் அவர்.

“நான் ஒன்றும் சுகாதார வல்லுநர் அல்ல. ஆனால், பிரசவத்தின்போது பழங்குடி குழந்தைகள் மட்டுமே மரணமடைவது ஏன்? அந்தக் குழந்தையைக் காப்பாற்ற வேண்டிய அடிப்படைப் பொறுப்பு அரசாங்கத்திற்கு இல்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா?''

பழங்குடியினர் நலத்திட்டங்களுக்காக செய்யப்படும் நிதி ஒதுக்கீடுகள் குறித்து கேள்வி எழுப்பியபோதெல்லாம் தனக்கு தீவிரவாதி என்ற முத்திரைதான் குத்தப்படுகிறது என்கிறார் ராம். “அரசாங்கம் முன்முயற்சி எடுத்து, கர்ப்பிணிப் பெண்களுக்கு மருத்துவ சோதனைகளை நடத்தியிருந்தால் பல உயிர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். இப்போது, அதிகாரிகள் போலிச் சாக்குகளை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்,'' என்றும் ராமன் கூறகிறார். அவருடைய குற்றச்சாட்டுகளுக்கு சில அடிப்படைகள் இருக்கவே செய்கின்றன. கடந்த 10 ஆண்டுகளில், பல்வேறு திட்டங்களின் கீழ் அட்டப்பாடி மேம்பாட்டுக்காக என மாநில அரசும் மத்திய அரசும் 800 கோடி ரூபாய்க்கு மேல் பாய்ச்சியுள்ளன. ஆனால், அந்தப் பணத்தால் பட்டினியாலும் ஊட்டச்சத்தின்மையாலும் ஏற்படும் சிசு மரணங்களைத் தடுக்க முடியவில்லை.

அட்டப்பாடியில் சரியான நேரத்தில் தலையீடுகள் மேற்கொள்ளப்படுவது என்பது ஒருபோதும் நடந்ததில்லை. இங்கு பணி நியமனம் செய்யப்படும் அதிகாரிகள், தங்களுக்கு வழங்கப்படும் இடமாறுதல் ஆணைகளை ஒரு தண்டனையாகவே நினைக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் பிரச்சனை மேலும் ஆழமாக வேண்டும் என்றே விரும்புகிறார்கள். அப்போதுதானே மேலும் அதிகமான பணம் கொட்டும். ஆனால், அட்டப்பாடியில் அர்ப்பணிப்புடன் செயல்படும் சில அதிகாரிகளும் உள்ளனர். ஒரு சேவை லட்சியத்துடன் பணியாற்றுகிறவர்கள் அவர்கள். அவர்களில் ஒருவர்தான் மாவட்ட துணை மருத்துவ அலுவலரான டாக்டர் பிரபுதாஸ். 1990ம் ஆண்டில் தனது எம்பிபிஎஸ் படிப்பை முடித்த அவர் அட்டப்பாடிக்கு வர முடிவு செய்தார். 15 ஆண்டுகளாக பழங்குடி மக்களின் கிராமங்களில் இயங்கி வருகிறார்.

“பெரும்பாலான பெண்கள் ஊட்டச் சத்துக் குறைப்பாட்டோடு இருப்பதால் இங்கு கடுமையான

நிலைமை நிலவுகிறது. சிசு மரணப் பிரச்சனையை கையாள்வதற்கு எளிதானத் தீர்வுகள் இல்லை. மேலும் மேலும் பலிகள் நடைபெறுவதை தவிர்க்க போதுமான மருத்துவ வசதிகளை செய்து கொடுப்பதில் எங்களால் முடிந்த அளவிற்கு நாங்கள் முயன்று வருகிறோம்,'' என்கிறார் பிரபுதாஸ். சுகாதாரத்துறை பணிகளை இவர்தான் ஒருங்கிணைத்து வருகிறார்.

தற்போதைய சுகாதார நெருக்கடி திடீரென்று ஏற்பட்ட புதிய பிரச்சனை அல்ல என்கிறார் அவர். இந்த வட்டாரத்தில் உள்ள பழங்குடி மக்களின் சுகாதார நிலைமை நீண்ட நெடுங்காலமாகவே வீழ்ச்சி அடைந்து வந்திருக்கிறது. அவர்களுடைய உணவுப் பழக்கங்களும் வாழ்க்கை முறைகளும் மாறியுள்ளன. முன்பு அவர்கள் தங்களது தோட்டங்களிலேயே விளைந்த ஊட்டச்சத்து மிகுந்த உணவைத்தான் உட்கொண்டு வந்தார்கள். இன்று அவர்கள் ரேஷன் கடைகள் மூலம் கிலோ ஒரு ரூபாய் விலைக்கு வழங்கப்படுகிற தரக்குறைவான அரிசியைத்தான் சாப்பிடுகிறார்கள்,'' என்கிறார் அவர்.

''ஒரு மருத்துவர் என்ற முறையில் நான் யாருக்காக பணியாற்றுகிறேனோ அந்த மக்களுக்குப் போதுமான அளவுக்குச் செய்ய முடியவில்லை என்ற வருத்தம் எனக்கு இருக்கிறது. பேறுகால ஆலோசனை மையங்களுக்கு வருகிற, பிரசவத்திற்காக மருத்துவமனையில் சேருகிற பழங்குடிப் பெண்கள் குறைவுதான். அவர்களுடைய உடல் ஆரோக்கியமும் மிக மோசமாக இருக்கிறது என்று அவர் கூறகிறார். பழங்குடிப் பெண்களிடையே கருச்சிதைவு விகிதமும் அதிகரித்துள்ளது என்று அவர் தெரிவிக்கிறார். 2010–11ல் 22 பெண்கள் கருக்கலைப்பு செய்து கொண்டனர். 2011–12ல் 27 பெண்கள் கருக்கலைப்பை நாடினர். 2012–13ல் கருக்கலைப்பு செய்துகொண்ட பெண்கள் 44 பேர். இந்த ஆண்டு ஏப்ரல் முதல் இதுவரையில் 18 பேர் கருக்கலைப்பு செய்துகொண்டனர் என அதிகாரப்பூர்வ புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

''இந்தப் புள்ளிவிவரங்கள் எந்த அளவிற்கு பழங்குடி தாய்மார்களிடையே அவர்களது மகப்பேறு சார்ந்த சுகாதார நிலைமை மோசமாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. ஊட்டச்சத்துக் குறைவும் மோசமான ஆரோக்கியமுமே அதிக அளவு கருக்கலைப்பிற்கு காரணமாக உள்ளன'' என்று அவர் குறிப்பிடுகிறார்.

ஆனால், இந்தப் புள்ளிவிவரங்கள் இந்த வட்டாரத்தின் முழுமையான நிலவரத்தை வெளிப்படுத்துவதாகக் கூறமுடியாது. ஏனென்றால், பல பெண்கள் மருத்துவமனைக்கு வருவதில்லை. இந்த வட்டாரத்தில் நிகழக்கூடிய பல கருச்சிதைவுகள் பதிவு செய்யப்படாமலேயே போகலாம் என்று சுகாதார அதிகாரிகள் கவலை தெரிவிக்கிறார்கள். அண்மையில் இந்த வட்டாரத்தைச் சேர்ந்த 23,597 பழங்குடி மக்களிடையே சுகாதாரத் துறையும் பழங்குடியினர் நலத்துறையும் இணைந்து ஒரு ஆய்வு மேற்கொண்டன. அதன்படி வயதில் பெரியவர்களான 496 பேர், 70 கர்ப்பிணிப் பெண்கள், 12 வயதிற்குக் குறைந்த 283 குழந்தைகள் ரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்தின் மேம்பாட்டு நடவடிக்கைகள் தோல்வியடைந்திருப்பதையும் நலத்திட்டங்களில் பெரும் ஊழல்கள் நடைபெறுவதையும் இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது.

3,600 பழங்குடி தம்பதியினருக்கு குழந்தையின்மை பிரச்சனை இருப்பதாக அந்த ஆய்வு கண்டுபிடித்துள்ளது. தீவிர ரத்த சோகை, நுரையீரல் கோளாறுகள், கை, கால்களில் ரத்தக் குழாய்களில் கடுமையான வீக்கம் ஆகிய நோய்கள் பரவலாக உள்ளன.

''அழியும் நிலையில் நாங்கள் இருக்கிறோம். நாங்கள் மீள்வதற்கான ஒரே வழி எங்களது பாரம்பரியமான விவசாய முறைக்குத் திரும்புவதுதான்,'' என்கிறார் அட்டப்பாடி பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவரான பி.கே. முருகன். ''எங்களது பாரம்பரிய உணவுகள் கிடைப்பதில்லை என்பதால்தான் சுகாதார நெருக்கடிக்கு நாங்கள் உள்ளாகியிருக்கிறோம். ஒரு காலத்தில் நாங்கள் இரும்புச் சத்து மிகுந்த 46 வகை காய்கறிகளையும் சிறுதானியங்களையும் உட்கொண்டு வந்தோம். இன்றைக்கு எங்களுக்குக் கிடைப்பது ஒன்றே ஒன்றுதான். மான்ய விலையில் தரப்படுகிற அரிசி மட்டும்தான். அதிலே எவ்விதமான ஊட்டச்சத்தும் கிடையாது,'' என்கிறார் அவர்.

அட்டப்பாடி பழங்குடி மக்கள் பெரும்பாலோருக்கு சொந்தமான சாகுபடி நிலம் எதுவும் கிடையாது. ஏனென்றால், பெரும்பாலான சாகுபடி நிலங்கள் கடந்த 30 ஆண்டுகளாக இந்த வட்டாரத்தில் வந்து குடியேறியவர்களாலும் நில மோசடிப் பேர்வழிகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டு வந்துள்ளன. இன்று அட்டப்பாடியில் சுமார் 260 நிலமற்ற பழங்குடிக் குடும்பங்கள் உள்ளன.

முன்பு பழங்குடி மக்களுக்கு சொந்தமாக 16,151.14 ஏக்கர் நிலங்கள் இருந்தன என்று தெரிவிக்கிறார், அட்டப்பாடியில் உள்ள ஒருங்கிணைந்த பழங்குடி மேம்பாட்டுத் திட்ட இயக்குனர் பி.வி. ராதாகிருஷ்ணன். ''1977ல் நாங்கள் நடத்திய ஒரு ஆய்வில் இந்த வட்டாரத்தில் 2158 குடும்பங்கள் 10,159.65 ஏக்கர் நிலத்தை இழந்துவிட்டன என்பது தெரியவந்தது. சுமார் 900 நில தாவா மனுக்கள் பல்வேறு நீதிமன்றங்களில் தீர்ப்புக்காகக் காத்திருக்கின்றன. பழங்குடி மக்களின் நிலங்களை பழங்குடி அல்லாதவர்களுக்கு விற்பதற்குத்

தடைவிதிக்கும் கறாரான சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம் என்ற போதிலும் கூட நடைமுறையில் அது பழங்குடி மக்களுக்கு உதவுவதாக இல்லை,'' என்கிறார் அவர்.

பழங்குடிப் பகுதி நிலங்களை அவற்றின் உண்மையான உரிமையாளர்களுக்கு மீட்டுத் தருவதற்கான பல்வேறு முயற்சிகளை சக்திவாய்ந்த நிலமோசடிப் பேர்வழிகளாலும், இங்கு இப்பகுதிகளில் குடியேறியவர்களாலும் முடக்க முடிந்திருக்கிறது. அண்மையில் வெள்ளங்குளம் கிராமத்தில் 150 ஏக்கர் பழங்குடியினர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஆக்கிரமிப்பாளர்களின் மீது வருவாய்த்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டனர்.

''பழங்குடியினர் பகுதிகளில் பல ஓய்வு விடுதிகள் முளைத்துள்ளன. ஆயினும், அந்த ஆக்கிரமிப்பாளர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஏனென்றால், அவர்களின் பின்னணியில் அரசியல் கட்சிகள் இருக்கின்றன,'' என்று ராதாகிருஷ்ணன் கூறுகிறார்.


www.thehindu.com

சிசு மரணங்கள் இந்த நிலப்பிரச்சனையின் மீது நம் கவனத்தை ஈர்த்துள்ளன. அட்டப்பாடிப் பகுதியை பழங்குடியினருக்கான தனி மண்டலமாக அறிவிக்க வேண்டும் என்று சமூகச் செயல்பாட்டாளர்கள் கோருகிறார்கள். புலிகளுக்கும் யானைகளுக்கும் தனி தேசிய பூங்காக்கள் இருக்கிறபோது பழங்குடி மக்களுக்காக ஏன் இருக்கக் கூடாது,'' என்று கேட்கிறார் சமூகப் பணியாளரான ராஜேந்திர பிரசாத்.

பழங்குடி மக்களின் மேம்பாட்டில் அரசாங்கத்திற்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால் அது நிலப்பிரச்சனையில் தலையிட வேண்டும், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை மீட்டு பழங்குடி மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார். ''அழிவிலிருந்து அவர்களைக் காப்பாற்ற இது ஒன்றுதான் வழி. மலிவு விலை அரிசியாலோ கேழ்வரகாலோ அவர்களைக் காப்பாற்ற முடியாது. அவை அவர்களை நிரந்தரமாக அடிமையாக்கிவிடும்,'' என்கிறார் ராஜேந்திர பிரசாத். சிசு மரணங்கள் அதிகமான பழங்குடி மக்களுக்கு மலிவு விலை அரிசி கிடைப்பதை உறுதிப்படுத்தியுள்ளன. முன்பு 3,066 பழங்குடி குடும்பங்களுக்கு இந்தத் திட்டம் மறுக்கப்பட்டிருந்தது. அதற்குக் காரணம் அவர்கள் வறுமைக் கோட்டிற்கு மேலே இருப்பதுதான் என்று கூறப்பட்டது. அவர்களிடம் குடும்ப அட்டைகளும், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியும், இரண்டு ஏக்கர் நிலமும், மொபைல் போனும் இருந்ததால் அவர்கள் இப்படி வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ளவர்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தார்கள்.

இன்று பழங்குடியினர் அனைவருக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்வோர் என்ற அடையாள அட்டைகளை மாநில அரசு வழங்கியுள்ளது. அவர்கள் அனைவருக்கும் மலிவு விலை அரிசி கிடைப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு பக்கம் நிலம் தொடர்பான விவாதங்கள் தொடர்ந்துகொண்டிருக்க, பழங்குடியினர் வட்டாரத்தில் ஒரு மிகப் பெரிய சுகாதார நெருக்கடி ஏற்படக் கூடும் என்று வல்லுநர்கள் எச்சரிக்கிறார்கள். 50 பழங்குடி கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு, 99 சதவீத குழந்தைகள் ஊட்டச்சத்தின்மையால் அவதிப்படுகின்றனர் என்று தெரிவிக்கிறது.

அட்டப்பாடியில் நிலவும் சுகாதார நிலைமை குறித்து ஒரு விமர்சனப்பூர்வமான மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்று கூறுகிறார் கொச்சி நகரில் உள்ள குழந்தை மருத்துவ வல்லுநர் டாக்டர் இ.கே. சத்யனாஜி. ''இங்கு 4 சதவீதக் குழந்தைகள் கடுமையான ரத்த சோகையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களது நோய் எதிர்ப்பு சக்தி மிகக் குறைவாக உள்ளது,'' என்றும் அவர் கூறுகிறார்.

சிசு மரணங்கள் அதிக எண்ணிக்கையில் நிகழ்வதன் காரணங்களைக் கண்டறிவதற்காக டாக்டர் சத்யானாஜி கடந்த மே மாதம் ஒரு ஆய்வு மேற்கொண்டார். ''தற்போதைய சுகாதார நிலைமைதான் இன்னும் சில காலத்திற்கு நீடிக்கும் என்றால், அட்டப்பாடியில் மேலும் அதிகமான சிசு மரணங்கள் நிகழும்,'' என்று எச்சரிக்கிறார் அவர்.

**ஆதாரம்: Tehelka, 2013 June 15**

# பிறந்த முதல்நாளே மடியும் 3,09,000 சிசுக்கள்

**உலகத்தில் பிறந்த முதல் நாளே குழந்தைகள் மரணம் அடைவதில் இந்தியா முன்னணியில் இருக்கிறது. ஊட்டச்சத்துக் குறைவே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது**

**– ஜோத்ஸ்னா சிங்**

ஊட்டச்சத்துக் குறைவு மிக அதிகமாக இருக்கும் நாடு என செய்திகளில் அடிபட்ட இந்தியா, குழந்தைகள் பிறந்த ஓராண்டிற்குள் அதிக எண்ணிக்கையில் மரணமடைவதிலும் இப்போது செய்திகளில் அடிபடத் தொடங்கியுள்ளது. உலகத்தில் பிறக்கிற முதல் நாள் அன்றே உயிரிழக்கும் குழந்தைகளில் 29 சதவீத மரணங்கள் இந்தியாவில்தான் நிகழ்கின்றன. சுமார் 309,000 சிசுக்கள் இவ்வாறு முதல் நாளே மரணத்தைத் தழுவுகின்றன. இதில் மோசமான மற்றொரு தகவல் என்னவென்றால் குழந்தையை பிரசவித்த முதல் நாளே மரணமடையும் தாய்மார்கள் எண்ணிக்கையும் இங்குதான் அதிகம். சுமார் 56,000 தாய்மார்கள் முதல் நாளே மரணிக்கிறார்கள் என்று உலகளாவிய தொண்டு நிறுவனமாகிய 'சேவ் தி சில்ரன்' அமைப்பின் வருடாந்திர அறிக்கைத் தெரிவிக்கிறது.

“வாழ்க்கையில் மிக அபாயகரமான சோதனைமிக்க நாள் முதல் நாள்தான். மூச்சுவிட இயலாமையும், உரிய முதிர்ச்சியை அடையாத உடல் அமைப்பும்தான் இதற்கு முக்கியமான இரண்டு காரணங்கள்,” என்கிறார் புதுதில்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு தலைவர் வினோத் பால் “இந்தியாவில் உயிரிழப்பு நிகழ்வதற்கான மிக பரவலான காரணம் ரத்தக் கசிவுதான்,” என்றும் அவர் கூறுகிறார்.

**குழந்தைகள், தாய்மார்களின் நிலை:**

பிறப்பின் முதல்நாள் அன்றே நிகழ்கிற 99 சதவீத மரணங்கள் வளரும் நாடுகளில்தான் நிகழ்கின்றன. தொழில் வளர்ச்சிப் பெற்ற நாடுகளில் ஒரு சதவீத முதல் மரணங்கள் நிகழ்கின்றன. அவற்றில் முதலிடம் பிடித்திருப்பது அமெரிக்கா. 186 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட 'உலக அன்னையர் நிலை' குறித்த அறிக்கை இதனைத் தெரிவிக்கிறது. வளரும் நாடுகளைப் பொறுத்தவரையில், ஆப்பிரிக்காவை அடுத்து, குழந்தையாய் பிறப்பது அபாயகரமாக இருப்பது தெற்கு ஆசியாவில்தான். ஒவ்வொரு ஆண்டும், பிறப்பின் முதல் நாள் அன்றே சுமார் 10 லட்சம் குழந்தைகள் உயிரிழக்கிறார்கள். இதில் 40 சதவீத மரணங்கள் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நிகழ்கின்றன என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. அன்னையரின் ஊட்டச்சத்துக் குறைவே இந்த மரணங்களுக்குக் காரணம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஊட்டச்சத்துக் குறைவானது உடல் குறைபாடுகளுக்கும், உயிர் வாழ்வதற்குப் போராடுகிற நிலைமைக்கும் இட்டுச் செல்கிறது.

பங்களாதேஷ், இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளில் 12 முதல் 13 சதவீதம் வரையிலான பெண்கள் இத்தகைய உயிர்ப்போராட்டத்திற்கு உள்ளாகிறார்கள். இது பிரசவ காலத்தின்போது மிக அபாயகரமான நிலைமைக்கும், எடைக் குறைவான குழந்தைகள் பிறப்பதற்கும் இட்டுச் செல்கிறது. தெற்காசியாவில் 43 சதவீத பெண்கள் மட்டுமே மருத்துவ மையத்தில் பிரசவிக்கிறார்கள். இது ஆப்பிரிக்காவின் சஹாரா பாலைவனப் பகுதி நாடுகளைவிட மோசமான நிலைமையாகும். அங்கு 46 சதவீதப் பெண்கள் மருத்துவமனைகளில் பிரசவிக்கிறார்கள்.

உரிய காலத்திற்கு முன்பாகவே குழந்தைகள் பிறப்பது என்பதும் தெற்காசியாவில் ஒரு முக்கியப் பிரச்சனையாகும். இந்த நாடுகளில் சராசரியாக 13.3 சதவீத பிரசவங்கள் இவ்வாறு குறைப் பிரசவமாக உரிய காலத்திற்கு முன்பாகவே நிகழ்கின்றன. உலகிலேயே இது மிக அதிகமான விகிதமாகும். இது இந்தியாவைப் பொறுத்தவரையில் ஒரு கவலைக்குரிய செய்தியாகும். ஏனென்றால், பிரசவகால மரணங்களைக் குறைப்பதில் பல தெற்காசிய நாடுகள் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளன. 1990க்குப் பிறகு மேற்கொண்ட முயற்சிகளின் மூலம் பங்களாதேஷ் நாட்டில், புதிதாகப் பிறக்கும் குழந்தைகளின் மரணம் 49 சதவீதம் வரை குறைந்திருக்கிறது. சமூக சுகாதாரப்



*newindianexpress.com*

பணியாளர்கள் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று தாய்மார்களையும் குழந்தைகளையும் கவனித்துக் கொள்வது, குழந்தைகள் சுலபமாக மூச்சுவிட உதவும் சுவாசக் கருவியை பயன்படுத்துவதற்கு பேறுகால பணியாளர்களுக்கும் மருத்துவ உதவியாளர்களுக்கும் பயிற்சி அளிப்பது போன்ற முயற்சிகளால் இது சாத்தியமாகியிருக்கிறது. நேபாள நாட்டிலும் சிசு மரணம் 1990க்கு பிறகு 97 சதவீத அளவிற்குக் குறைந்துள்ளது. சமூக அடிப்படையிலான மருத்துவ கண்காணிப்பு, தொப்புல் கொடியில் ஏற்படும் தொற்று நோயை தவிர்ப்பதற்கான குறைந்த செலவிலான 'ஆன்ட்டி செப்டிக் க்ளோரோஹெக்சிடைன்' முறையைப் பயன்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் அங்கு இது சாத்தியமாகியுள்ளது.

### இந்தியாவின் பிரச்சனைக்குத் தீர்வு

புதிதாகப் பிறக்கும் குழந்தைகளை கவனித்துக் கொள்வதற்காக நாட்டின் 600 மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் தீவிர பேறுகால சிகிச்சை மையங்கள் திறக்கப்பட்டு வருவதாக மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தின் பொது சுகாதார சேவைகள் பிரிவு இயக்குநர் ஜகதீஸ் பிரசாத் கூறுகிறார். ''எங்கெல்லாம் ஒரு பெண் பிரசவிக்கிறாளோ அங்கெல்லாம் எதிர்பாராத சிக்கல்களை சமாளிப்பதற்கான ஏற்பாடுகள் தயாராக இருக்க வேண்டும்,'' என்கிறார் 'சேவ் தி சில்ரன்' அமைப்பின் சுகாதாரப் பிரிவு மூத்த ஆலோசகர் ராஜீவ் டாண்டன். பிரசவத்தின்போது ஏற்படக் கூடிய நோய்த் தொற்றுகளை குணமாக்குவதற்கான ஜென்டா மைசின் என்ற மருந்தை பயன்படுத்துவதற்கு துணை செவிலியர் உதவியாளர்களை (ஏஎன்எம்) அனுமதிப்பது என மத்திய அரசு முடிவு செய்திருப்பதை வரவேற்பதாக டாண்டன் தெரிவித்தார். ''மருத்துவர்கள் மட்டுமல்லாமல் செவிலிய உதவியாளர்களும் ஜென்டா மைசின் மருந்தை குழந்தைகளுக்குக் கொடுக்கலாம் என்று சென்ற மாதம் அரசு முடிவு செய்துள்ளது. பிறக்கும் குழந்தைகள் மரணமடைவதற்கு நோய்த் தொற்று ஒரு முக்கியமான காரணம் என்பதால் அரசின் இந்த முடிவு ஒரு சரியான நடவடிக்கையாகும்,'' என்கிறார் ராஜீவ் டாண்டன்.

**மிக அபாயகரமான நாடுகள்**

| நாடு | முதல் நாள் மரணங்கள் | உலக அளவிலான சதவீதம் |
|---|---|---|
| இந்தியா | 309,300 | 29% |
| நைஜீரியா | 89,700 | 9% |
| பாகிஸ்தான் | 59,800 | 6% |
| சீனா | 50,600 | 5% |
| டிஆர் காங்கோ | 48,400 | 3% |
| இதோபியா | 28,800 | 3% |
| பங்களாதேஷ் | 28,100 | 3% |

*Source: State of the World's Mothers*

***Source: Down To Earth, 25 May 2013***

## பாலியல் வன்முறை: இந்தியாவில் வருடத்திற்கு 7 லட்சம் சிறுமிகள் பாதிப்பு

இந்தியாவில் ஒரு வருடத்திற்கு சுமார் 7 லட்சம் சிறுமிகள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதாக அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது. இந்திய அரசின் குழந்தைகள் நலத்துறையானது குழந்தைகள் மீதான பல்வேறு வன்முறை குறித்த விரிவான ஆய்வை மேற்கொண்டது. இந்த ஆய்வில் பதிமூன்று மாநிலங்களில் உள்ள 12 ஆயிரத்து 447 குழந்தைகளிடம் விவரங்கள் பெறப்பட்டன. இவற்றில் 53 சதவிகித குழந்தைகள் ஏதோ ஒரு வகையில் பாலியல் வன்முறைக்கு உள்ளானதாகவும், 29 சதவிகித குழந்தைகள் மோசமான பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் அதிர்ச்சி தகவல் கிடைக்கப் பெற்றது.

இதன்படி, இந்தியாவில் ஒரு வருடத்திற்கு சுமார் 7 லட்சம் சிறுமிகள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். மேலும், இவற்றில் விலைமாதர்கள் என கூறப்படுபவர்களில் 15 சதவிகிதம் பேர் பதினைந்து வயதுக்கும் குறைவானவர்கள் என ஆய்வில் தெரிய வந்துள்ளது. இதேபோல், துளிர் எனும் அமைப்பு 2006ம் ஆண்டு சென்னையைச் சேர்ந்த சிறுமிகள் 2211 பேரிடம் மேற்கொண்ட ஆய்வில் 42 சதவிகிதம் பேர் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது. சாக்சி எனும் தொண்டு நிறுவனம் தில்லியில் 350 குழந்தைகளிடம் மேற்கொண்ட ஆய்வில் 63 சதவிகிதம் பேர் குடும்ப உறுப்பினர்களால் பாலியல் வன்முறைக்குப் உள்ளாக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

**– தீக்கதிர், 2.7.2013**

# பள்ளிகளில் கொடும் தண்டனைகள்

*2009ம் ஆண்டின் குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் உடல் ரீதியான தண்டனைகளுக்கும் மன ரீதியான துன்புறுத்தல்களுக்கும் தடை விதிக்கிறது. இந்த தண்டனைகள் குறித்து விரிவான விளக்கங்கள் அளித்துள்ள தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் பள்ளிகளில் இருந்து கொடுந்தண்டனைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. ஆனால், ஒரு சட்டக் கண்ணோட்டத்தில் இந்தப் பிரச்சனை அணுகப்படுகின்றது என்றாலும், ஆசிரியர்களின் கடுமையான, அவர்களை பலவீனப்படுத்துகிற சூழல்கள் கவனத்தில் கொள்ளப்படவில்லை. மேலும், ஆசிரியர்களை மட்டும் குறிவைக்கிற இந்தச் சட்டம் பள்ளி நிர்வாகங்களை பதிலளிக்கக் கடமைப்பட்டவர்களாக ஆக்கவில்லை.*

**–திஷா நவானி**

பள்ளிகளில் அளிக்கப்படும் கடுமையான தண்டனைகள் குறித்த விவாதம் கல்வியாளர்கள், குழந்தைகள், அவர்களது பெற்றோர் ஆகியோரது கருத்துக்களை உள்ளடக்கியதாக உள்ளது. ஆனால், அது ஆசிரியர்களை விலக்கி வைக்கிறது. அவர்கள் சந்தேகத்துடனேயே பார்க்கப்பட்டு, விவாதத்திலிருந்து தள்ளி வைக்கப்படுகிறார்கள். எந்த ஒரு சூழலிலும் கடும் தண்டனைகள் நியாயப்படுவதற்கில்லை. எந்த ஒரு பள்ளியிலும் அப்படிப்பட்ட தண்டனைகளுக்கு இடமிருக்கக் கூடாது. ஆனால், இது குறித்த கண்ணோட்டமானது ஒரு அணுகுமுறைப் பிரச்சனையாகவே உருவாகியுள்ளது. சரி செய்யப்பட வேண்டிய கண்ணோட்டம் இது.

### தலைப்புச் செய்திகள்

பள்ளிகளில் குழந்தைகள் அடிக்கப்படுவது அல்லது அவமதிக்கப்படுவது என்பது ஒரு "பரபரப்பான" செய்தியாகிறது, ஆசிரியர்கள் மீது அதிருப்தியை ஏற்படுத்துகிறது என்பது புரிந்து கொள்ளக் கூடியதுதான். எந்த அளவுக்குக் கொடூரமாக அந்தத் தண்டனை இருக்கிறதோ அந்த அளவுக்கு வலுவான எதிர்வினைகளும் ஏற்படுகின்றன. கடந்த நான்காண்டு காலத்தில் (2009–13) தி ஹிண்டு, தி டைம்ஸ் ஆஃப் இந்தியா, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய தேசிய நாளேடுகளில் வெளியான இத்தகைய தண்டனைகள் குறித்த செய்திகளை ஆராய ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. விரிவான ஆராய்ச்சிகளை செய்வதல்ல அந்த முயற்சியின் நோக்கம். அந்த செய்திகளிலிருந்து கிடைக்கிற அடிப்படை தன்மைகள் குறித்து புரிந்துகொள்வதே அதன் நோக்கம். பள்ளிகளில் குழந்தைகள் உடல்ரீதியான தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள், பெரும்பாலும் மிக கொடூரமான முறையில் தண்டிக்கப்படுகிறார்கள். மனரீதியாகத் துன்புறுத்தப்படுகிறார்கள், அவமதிக்கப்படுகிறார்கள், பாலியல் கொடுமைகளுக்கும் உள்ளாகிறார்கள் என்று அந்த ஆய்வு வெளிப்படுத்தியது. குறைந்த கட்டணம் வசூலிக்கக்கூடிய தனியார் பள்ளிகள், மேல்தட்டு தனியார் பள்ளிகள், அரசுப்பள்ளிகள், ஆங்கில வழிப் பள்ளிகள், அந்தந்த வட்டார மொழி வழிப் பள்ளிகள் என எல்லா பள்ளிகளிலும் இத்தகைய தண்டனைகள் பரவலாக உள்ளன. ஒரு வேறுபாடு என்னவென்றால் இத்தகைய தண்டனைகள் குறித்த புகார்கள் அரசுப்பள்ளிகளை விட தனியார் பள்ளிகள் தொடர்பாகத்தான் அதிகமாக உள்ளன. இந்தப் பள்ளிகளிடையே உள்ள ஒற்றுமை என்னவென்றால் பெரும்பாலான பள்ளிகள், அவை எப்படிப்பட்ட பள்ளிகளாக இருந்தாலும், சமுதாயத்தில் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு எதிராகத்தான் தண்டனைகள் தரப்படுகின்றன.

சிறு நகரங்கள் முதல் பெரிய நகரங்கள் வரை பள்ளிக்கூட தண்டனைச் செய்திகள் வந்துள்ளன. பவானா, ஷாபூர், பேதுல், மொஹாலி, பர்கார், அஹமதாபாத், ஜம்முகாஷ்மீர், கர்னால், மதுரை, மதனபேட், புரதாபூர், கோயம்பத்தூர், 24 பர்கானா, திண்டுக்கல், ஜெய்ப்பூர், அல்வார், புவனேஸ்வர், ஹைதராபாத், பெங்களூரு, கொல்கத்தா, தில்லி போன்ற ஊர்கள், ஏன் மும்பையும் கூட, இந்த செய்திகளில் இடம் பெற்றுள்ளன. தண்டனைகள் பல வகைப்பட்டதாக உள்ளன. வெயிலில் மண்டி போட்டு உட்காரவைப்பது, கன்னத்தில் அறைவது, பிரம்பால் அடிப்பது, கைகளையும் கால்களையும் திருகுவது, குத்துவது, வேப்பிலை போன்ற சாப்பிட முடியாத பொருட்களை சாப்பிடக் கட்டாயப்படுத்துவது, மரக்குச்சிகளால் தாக்குவது, இரும்பு அளவுகோலை வீசுவது (கண்களில் காயம் ஏற்படுத்துவது), கழிவறைக்குள் பூட்டிவைப்பது, நீண்ட நேரத்திற்கு தோப்புகரணம் போட வைப்பது, பல மணிநேரம் முழங்கால் போடவைப்பது, அழுக்கு போர்வைகளை நக்கவைப்பது, முகத்தை தரையில் மோதுவது, சங்கிலியால் கைகளைக் கட்டுவது, முடியை வெட்டுவது, காலணிகளைக் கழற்ற வைப்பது, அரையாடையுடன் வீட்டுக்கு நடந்துபோக வைப்பது என பலவகை தண்டனைகள் தரப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலும் தனிப்பட்ட குழந்தைகளுக்குத்தான் தரப்பட்டுள்ளன. சில நேரங்களில் ஒட்டு மொத்த

வகுப்பிற்கும் சேட்டை செய்தார்கள் என்று பிரம்படிக்கும் வேறு தண்டனைகளுக்கும் உட்படுத்துவது என்பதும் நடந்துள்ளது. பெரும்பாலும் இப்படிப்பட்ட தண்டனைகள் தருகிற ஆசிரியர்கள் ஆண்களாகவே உள்ளனர். ஒரு சில பெண்களும் இப்படிப்பட்ட தண்டனைகளைத் தருகிறார்கள். கடுமையாகத் தண்டிக்கிற பள்ளி முதல்வர்களும் இருக்கிறார்கள்.

மாணவர்கள் தண்டிக்கப்படுவதற்கான காரணங்களும் பல வகையாக உள்ளன. வகுப்பில் கவனமின்றி இருப்பது, வீட்டுப்பாடங்களை செய்யாமல் வருவது, ஏதேனும் பள்ளி நிகழ்ச்சியில் கலந்துகொள்ளாமல் இருப்பது, கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் இருப்பது, மோசமான கையெழுத்து, அனுமதி பெறாமல் வகுப்புக்கு வராமல் இருப்பது, பள்ளி நிர்வாகம் பரிந்துரைத்த உணவு வகைகளைக் கொண்டுவராமல் இருப்பது, வகுப்பில் குறும்புத்தனம் செய்வது, பாட்டுப் பாடுவது, ஃபேஸ் புக் சமூக வலைத்தளங்களில் இத்தகைய தண்டனைகளுக்கு எதிராக கருத்துகளைப் பதிவு செய்வது, கட்டணம் செலுத்தாமல் இருப்பது, மற்ற மாணவர்களுடன் சண்டை போடுவது, ஒழுங்கற்ற முறையில் தலையை சீவிக்கொள்வது, தேர்வின்போது காப்பியடிப்பது, வகுப்பில் மொபைல் போன் பயன்படுத்துவது, இருக்கையில் சிறுநீர் கழிப்பது, அடிக்கடி கழிவறை செல்வது போன்ற காரணங்களுக்காக தண்டனை தரப்படுகிறது.

ஒரு ஆசிரியர் இப்படிப்பட்ட அதீதமான தண்டனை தருவதற்கு மாணவர்களின் ஒரு குறிப்பிட்ட நடத்தைதான் காரணம் என்று அந்தச் செய்திகள் காட்டவில்லை. தண்டிக்கப்படுகிற குழந்தைகளிடையே பாலினம், மதம், வயது ஆகிய பெரிய பாகுபாடு எதுவும் இல்லை. 4 வயது குழந்தை (குறைந்த எண்ணிக்கைதான் என்றாலும்) முதல் 15 வயது குழந்தை வரை தண்டனை பெறுகிறார்கள். தரப்படுகிற தண்டனையின் தன்மைக்கும் குழந்தையின் சாதி பின்னணிக்கும் பொருளாதாரப் பின்னணிக்கும் இடையே ஒரு சம்பந்தம் இருப்பதற்கு ஒரு வாய்ப்பு உள்ளது. ஆனால், பத்திரிகைச் செய்திகளை மட்டும் வைத்து இதைத் தீர்மானிப்பது கடினம். மதுரையில் ஒரு 7 வயது தலித் சிறுவன், ஆசிரியரின் ஆணைப்படி மற்றொரு மாணவனால் அடிக்கப்பட்டான். அந்த தலித் சிறுவன் தரையைப் பெருக்க மறுத்ததால் இந்தத் தண்டனை. ஒரு தலித் சிறுமி பள்ளியின் கழிவறைகளை சுத்தம் செய்யுமாறுக் கட்டாயப்படுத்தப்பட்டாள். இது போன்ற சில சம்பவங்களும் நடந்துள்ளன. மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் மேற்கொண்ட ஒரு ஆய்வும் (2007), தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் நடத்திய ஒரு ஆய்வும் (2009–10) பள்ளிகளில் உடல்ரீதியான தண்டனைகளும் வாய்மொழி வசவுகளும் அதிக அளவிற்கு இருப்பதைக் காட்டுகின்றன. பள்ளிகளில் இதைவிட மோசமான நிலைமையே இருக்கிறது, வெளிவந்துள்ள செய்திகள் ஒரு மேலோட்டமான நிகழ்வுகளைத்தான் காட்டியுள்ளன என்று சிலர் கூறுகிறார்கள். எனினும், இத்தகைய சம்பவங்கள் அவற்றின் வன்முறைத் தன்மை காரணமாக ஊடக வெளிச்சத்தைப் பெறுகின்றன. காவல் துறையின் அல்லது பள்ளி நிர்வாகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுவதால் ஊடகங்களில் செய்தியாகிற சம்பவங்களும் உண்டு. இப்படிப்பட்ட ஊடகச் செய்திகள் மக்களின் கண்ணோட்டத்தில் தாக்கம் ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், இத்தகையப் பிரச்சனைகளைக் கையாள்வது தொடர்பான அரசு கொள்கைகளிலும் தாக்கம் செலுத்துகின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

**தண்டனைகளுக்குத் தடை**

குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் –2009ன் பிரிவு 17(1) உடல்ரீதியான தண்டனைக்கும் மனரீதியான துன்புறுத்தலுக்கும் தடை விதிக்கிறது. அவ்வாறு உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் தண்டிப்பது என்பது தண்டனைக்குரிய குற்றம் என்று சட்டத்தின் பிரிவு 17(2) என்று கூறுகிறது. தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் பள்ளிகளில் தண்டனைகளை ஒழிப்பதற்கான தனது வழிகாட்டல்களில், பல்வேறு தண்டனைகளை வகைப்படுத்தியிருக்கிறது. ஆசிரியர்களுக்கான பயிலரங்குகள், வல்லுநர்களுடனான கலந்துரையாடல்கள், ஆக்கபூர்வ மாற்று நடவடிக்கைகள், சரிப்படுத்தும் வழிமுறைகள் ஆகியவற்றைப் பரிந்துரைத்துள்ளது.


இந்த சட்ட விதிகளும், வழிகாட்டல்களும் மதிப்பு வாய்ந்தவை என்பதை மறுக்க இயலாது. ஆனால், இவை இரண்டுமே இந்தப் பிரச்சனையை அரசமைப்பு சாசன சட்டக் கண்ணோட்டத்தில் பார்க்கின்றன. ஆசிரியர்கள் தண்டனை அளிக்காமல் தடுப்பது, அவர்களது அணுகுமுறைகளை மாற்றுவது, பள்ளிகளில் கடுமையான நிலைமைகள் ஏற்படுகிறபோது கூடுதல் திறமைகளுடன் அதைக் கையாளுவது என்றுதான் தீர்வுகளுக்கு வழி தேடப்படுகிறது. குழந்தைகள் தண்டிக்கப்படுவதற்கு, தவறு செய்யும் ஆசிரியர்களே காரணம் என்று கல்வி உரிமைச் சட்டம் தெளிவாகக் கூறுகிறது.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையேயான இயல்புக்கு மீறிய விகிதாச்சாரமும் ஒரு முக்கியமான பிரச்சனைதான் என்று ஆணையம் ஒப்புக்கொள்கிறது. ஆசிரியர்களால் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு வகுப்புகளில் அளவுக்கு மீறிய குழந்தைகள் சேர்க்கப்படுகிறார்கள். ஆக உண்மையான பிரச்சனை

வகுப்பறையில்தான் இருக்கிறது. ஆசிரியர்கள் எதிர்கொள்கிற உண்மையான சவாலாகவும் அது இருக்கிறது. மாணவர்கள், ஆசிரியர்கள், குடும்பம், பள்ளி நிர்வாகம், மாணவர் மன்றம் ஆகியவற்றுக்கிடையே ஒருங்கிணைப்பு தேவை என்று ஆணையம் கூறுகிறது. பாடத்திட்டத்தில் வாழ்க்கை சார்ந்த திறன்கள் சேர்க்கப்பட வேண்டும், ஆசிரியர்கள், மாணவர்கள் இரு தரப்பினருக்குமே பயிலரங்குகள் நடத்தப்பட வேண்டும், பள்ளிகளில் தண்டனைகள் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரைகளையும் ஆணையம் முன்வைத்துள்ளது. வகுப்பறையில் குழந்தைகளைக் கையாளுவதற்கான சில நடைமுறை யோசனைகளையும் கூறியுள்ளதன் மூலம் ஆசிரியர்களுக்கு கூடுதல் வாய்ப்புகளுக்கு ஆணையம் வழிவகுத்துள்ளது. அதேநேரத்தில் தகுதியுள்ள ஆலோசகர்கள் பள்ளியில் இருப்பது, தொழில்முறைப் பயிற்சி சார்ந்த உதவிகளைப் பெறுவதற்காக பள்ளிகளுக்குள் போதுமான நிதியாதாரம் இருப்பது, ஆசிரியர்களுக்கு சாதகமான ஆக்கபூர்வமான சூழல்கள் அமைவது ஆகியவற்றையும் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

“நீ என்ன செய்ய வேண்டுமென்று நான் சொல்கிறேன் என்றால்” என்று கூறுவதற்கு பதிலாக “நீ என்ன செய்ய வேண்டுமென்றால்” என்று கூறுவது எதிர்பார்க்கப்படுவது என்ன என்பதை தெளிவு படுத்துவது, உதாரணமாக, “நல்ல பிள்ளையாக இரு” என்று சொல்வதற்கு பதிலாக “அமைதியாக இரு” என்று சொல்வது, “இப்படி செய்யாதே, இப்படி செய்யக்கூடாது” என கட்டளையிடுவதைத் தவிர்ப்பது, குறிப்பிட்ட மாணவரின் நடத்தை அப்படியே தொடருமானால் மற்ற குழந்தைகளுடன் கலந்தாலோசித்து அந்த மாணவரைக் கட்டுப்படுத்துவது, நட்சத்திரங்கள்/ புள்ளிகள்/ மதிப்பெண்கள் தராமலிருப்பது ஆகிய நடைமுறைகள் ஆக்கபூர்வமாகப் பலனளிக்கக் கூடும். ஆனால், வகுப்பில் குறைவான குழந்தைகள் இருக்கும்போதுதான் அது சாத்தியம். ஐம்பது, அறுபது குழந்தைகள் ஒரே வகுப்பில் இருக்கிறபோது இது சாத்தியமாகாது. இந்த வழிமுறைகள் பலவும் ஒரு ஆசிரியர் தனது குழந்தைகள் தொடர்பான தனது அணுகுமுறைகளையும் கண்ணோட்டங்களையும் செயல்முறைகளையும் திருத்திக்கொள்வதற்கான மாற்றிக்கொள்வதற்கான “திருத்தல் நடவடிக்கைகள்” என்பதாகவே முன்வைக்கப்படுகின்றன. குழந்தைகளுக்கு தண்டனையளிக்கிற ஆசிரியர்களின் செயல்முறைகள் மாற்றப்பட வேண்டியவைதான் என்றாலும் கூட, அந்த அணுகுமுறைகள் சமூக ரீதியாகக் கட்டுப்படுத்தப்படுபவையாகவும், கட்டமைப்பு சார்ந்து தீர்மானிக்கப்படுபவையாகவும் உள்ளன. ஆகவே, அதேபோன்ற உறுதியுடன் பள்ளிகள் மற்றும் வகுப்பறைச் சூழல்களில் நிலவும் இந்த கட்டுப்பாடுகள் நீக்கப்படவில்லை என்றால், பள்ளிக்கூடங்களில், ஆசிரியர்களும் குழந்தைகளும் அவர்களது பிரச்சனைகள் காது கொடுத்து கேட்கப்படுகிற தாங்கள் மதிக்கப்படுகிறோம் என்று உணர்கிற ஒரு ஜனநாயகச் சூழலை ஏற்படுத்துவது குறித்து கற்பனை செய்வது கூட கடினமாகிவிடும்.

உடல்ரீதியான தண்டனை அல்லது மனரீதியான துன்புறுத்தல், பாகுபடுத்தல் என கருதக்கூடிய எந்த ஒரு செயலிலும் தாங்கள் ஈடுபட மாட்டோம் என்று உறுதியளிக்கும் எழுத்துப்பூர்வ உடன்படிக்கை ஒன்றை பள்ளி ஆசிரியர்கள் நிர்வாகத்துடனும் சம்பந்தப்பட் மாவட்ட அலுவலகத்துடனும் செய்து கொள்ள வேண்டும் என்ற வழிகாட்டல்கூட கூறப்பட்டுள்ளன. மாணவர்களை இவ்வாறு தாக்குவது என்பது தங்களுடைய அதிகாரம் என கருதும் போக்கு ஆசிரியர்களிடையே இருக்கிறது என்ற தோற்றத்தையும், சட்டப்பூர்வ பின்விளைவுகள் குறித்த அச்சம் ஒரு பயனுள்ள கட்டுப்பாடாக இருக்கும் என்ற எண்ணத்தையும் இந்த ஆலோசனை ஏற்படுத்துகிறது. இவ்வாறு ஆசிரியர்களுக்கு ஏராளமான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டாலும், பள்ளி நிர்வாகங்களுக்கோ பள்ளிகளில் அச்சமற்ற பயிற்சி – படிப்புச் சூழலை உருவாக்க வேண்டும் என்ற எளிய ஆலோசனை மட்டுமே கூறப்பட்டுள்ளது. அதற்கு எவ்வகையிலும் நிர்வாகம் அதற்கு பொறுப்பாக்கப் படவில்லை.



news.priyo.com

### ஒழுங்குபடுத்துவதில் தவறான வழிமுறை

குழந்தைகளுக்கு கற்பிப்பதிலோ, அவர்களை ஒழுங்குபடுத்துவதிலோ அச்சுறுத்தல், கேலி செய்தல், உடல் ரீதியாகத் தாக்குதல் போன்ற வழிமுறைகள் அவர்களது ஒட்டுமொத்த வளர்ச்சியை சீர்குலைக்கக் கூடிய பாதகமான பின்விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பது நன்கு நிலைநாட்டப்பட்டுள்ளது. ஆனாலும், இந்த வழிமுறைகளைக் கையாள்கிறவர்கள் அதை நியாயப்படுத்தவே செய்கிறார்கள். “ஆசிரியர் – மாணவர்

பிரச்சனை'' என்பதை உடனடியான பள்ளிச்சூழல் பின்னணியிலும் நெடுங்கால சமுதாயப் பின்னணியிலும் காண்பதற்கான முயற்சியே இந்தக் கட்டுரை.

### வன்முறைக் கலாச்சாரம்

வீடுகளில் பெற்றோருக்கும் குழந்தைகளுக்குமிடையே எத்தகைய உறவு நிலைகள் உள்ளன, குழந்தைகள் தொடர்பான சமுதாயப் பார்வை எப்படி இருக்கிறது, குழந்தைகளை ஒழுங்குபடுத்துவதற்கு ஏற்ற வழிகளாக கருதப்படுவது என்ன என்பதன் பிரதிபலிப்பாகவே பள்ளிகளில் ஆசிரியர் – மாணவர் உறவும் அமைந்திருக்கிறது. பெரியவர்களால் குழந்தைகள் கட்டுப்படுத்தப்படுகிற வீட்டு நடைமுறைகளே பள்ளிகளிலும் தொடர்கின்றன என்று தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. சமுதாயத்தில் பெரியவர்களாக வளர்ந்துள்ள எவர் ஒருவரும் குழந்தைகளிடம் எவ்வாறு நடந்துகொள்கிறார்களோ, அதைப்போலத்தான் ஒரு ஆசிரியரும் பள்ளியில் நடந்துகொள்கிறார் என்ற கருத்தை அந்த ஆய்வு காட்டுகிறது.

காலங்காலமாக பல்வேறு வழிகளில் குழந்தைப் பருவம் என்பது கட்டப்பட்டு வந்துள்ளது. அது கல்வி முறையை தீர்மானிப்பதாகவும் மிக முக்கியமாக பொருத்தமான முறையில் குழந்தைகளை ஒழுங்குபடுத்துவது எப்படி என்பதைத் தீர்மானிப்பதாகவும் இருந்து வந்துள்ளது. சரியானது எது, தவறானது எது என்று குழந்தைகளுக்கு புரிய வைப்பதற்காகவும் அவர்களுக்கு எது நல்லது என காட்டுவதற்காகவும், அவர்களைப் பணிய வைப்பதற்காகவும் திட்டுவது, அடிப்பது, கேலியாக அவமதிப்பது ஆகியவை இந்திய குடும்பங்களில் சர்வசாதாரணமாக நடைமுறையில் உள்ளன. என்ன செய்ய வேண்டும் என்று குழந்தைகளுக்கு கட்டளையிடப்படுகிறது. அவர்களை ஒழுங்குபடுத்துவதற்காக பெற்றோர் முரட்டுத்தனமான வழிமுறைகளைப் பின்பற்றுகிறார்கள். இதற்கெல்லாம் சமூக, கலாச்சார அங்கீகாரம் இருக்கிறது. ஏனென்றால், பெரியவர்களுக்கு அவர்களது வயதின் காரணமாகவும் அனுபவத்தின் காரணமாகவும் குழந்தைகளுக்கு நல்லது என்பது தெரியும் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. பெற்றோர்களை பள்ளிக்கு வரவழைத்து அவர்களது குழந்தைகள் பாடத்தில் ஆர்வமில்லாமல் இருப்பது குறித்து தெரிவிக்கிறபோது, சில பெற்றோர்கள் அந்த இடத்திலேயே ஆசிரியர் கண் முன்னாலேயே தங்கள் குழந்தைகளை ஈவிரக்கம் இல்லாமல் அடிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த அரசுப் பள்ளிகளின் ஆசிரியர்கள் இதனைத் தெரிவித்திருக்கிறார்கள். சில பெற்றோர்கள் ஆசிரியர்களிடம், தங்கள் பிள்ளைகள் விஷயத்தில் கறாராக நடந்துகொள்ளுமாறும் தேவைப்பட்டால் அடித்து உதைக்கவும் கேட்டுக்கொள்கிறார்கள். தங்கள் வீடுகளில் குழந்தைகள் எப்படிப்பட்ட வன்முறைகளை எதிர்கொள்கிறார்களோ அது, வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் மற்ற குழந்தைகளோடு அவர்கள் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பதிலும் வெளிப்படுகிறது. வன்முறை என்பது வாய்ப்புகள் மறுக்கப்பட்ட குடும்பங்களில் மட்டுமே நிகழ்வதல்ல. நடுத்தர, உயர் நடுத்தர குடும்பங்களிலும் நிகழ்கின்றன. இப்படிப்பட்ட பத்திரிகை செய்திகள் குறித்து சமூக வலைத்தளங்களில் பதிவு செய்துள்ள சில பெற்றோர்கள், ''என் பிள்ளைக்கு இவ்வாறு நடந்திருந்தால் ஒரு கத்தியை எடுத்து ஆசிரியரை குத்தி எலும்பை உடைத்திருப்பேன்,'' என்று எழுதியிருக்கிறார்கள். இது, நன்கு படித்த, இணையத்தள வசதிகள் உள்ள பெற்றோர்கள், இப்படிப்பட்ட சமூக வலைத்தளங்களை எப்படி தனிப்பட்ட கருத்துகளை வெளிப்படுத்தப் பயன்படுகின்றனர் என்பதை அறிந்த ஒரு பெற்றோரின் கருத்தாகும்.

### ஆசிரியர்கள், கற்பித்தல் பற்றிய மோசமான சமூகக் கண்ணோட்டம்

''யாரால் செய்ய முடியுமோ அவர்கள் செய்கிறார்கள். யாரால் செய்ய முடியாதோ அவர்கள் பாடம் நடத்துகிறார்கள்,'' என்பது ஜார்ஜ் பெர்னாட்ஷா கூறிய ஒரு புகழ்பெற்ற கருத்து. இந்தியச் சூழலில் இது உண்மையாகவே இருக்கிறது. ஒரு ஆசிரியரின் அந்தஸ்து என்பது எந்த வகுப்பிற்கு அவர் பாடம் நடத்துகிறார் என்பதற்கு நேரடியாக சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. மாணவர்கள் குறைவாக இருந்தால் ஆசிரியர்களின் அந்தஸ்தும் குறைவாக இருக்கிறது. ஒரு மென்மையான தொழிலாக மட்டும் ஆசிரியர் தொழில் பார்க்கப்படுவதில்லை. வலைத்தளத்தில் இப்படியெல்லாம் கூட ஆசிரியர் தொழில் சிறுமைப்படுத்தப்படுகிறது: ''மருத்துவர்களாகவோ, பொறியியலாளர்களாகவோ, பாதுகாப்புத்துறை அதிகாரிகளாகவோ ஆக முடியாதவர்கள், வேறு தொழல்களில் நுழைய முடியாதவர்கள் ஆசிரியர்களாக மாறுகிறார்கள்.'' தங்களது பள்ளி நாட்களில் வகுப்பறையின் கடைசி வரிசையில் உட்கார்ந்திருந்தவர்கள் இவர்கள். துண்டுக் காகிதங்களின் உதவியுடனோ அல்லது மற்றவர்களை காப்பியடிப்பதன் மூலமாகவோ இவர்கள் தேர்ச்சி பெற்றிருக்கக்கூடும்''. ஆசிரியர் தொழில் பற்றிய மற்றொரு பிரபலமான கருத்து, தொழில் ரீதியான திறமைகள் குறைவாக இருந்தால் போதும் என்பதாகும். அதே நேரத்தில் ஒரு தாயின் கவனிப்பு, பராமரிப்பு, நல்ல இயல்புகள் போன்ற மென்மையான திறமைகளுக்கு மேற்பட்ட தொழிலாகவும் கருதப்படுகிறது.

வலைத்தளத்தில் பதிவாகியுள்ள மற்றொரு கருத்திலிருந்து இது தெளிவாகப் புலப்படுகிறது: ''உன்னதமான தொழில்களில் ஒன்றுதான் ஆசிரியர் தொழில் என்பதை மனதில் கொள்ள வேண்டும். ஏனென்றால், இது அறிவை மற்றவர்களுக்கு கொண்டு செல்கிற தொழிலாகும். ஒரு ஆசிரியர் தனது மாணவர்களை தனது சொந்தக் குழந்தைகளாகக் கருதி முடிந்த வரையில் அவர்களை அன்போடும் கவனத்தோடும் நடத்த வேண்டும். மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும்போது, அவர்கள் பூக்களைப் போன்றவர்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும். அந்தப் பூக்கள் மலர்வதற்கும் மணம் பரப்புவதற்கும் உதவிடும் வகையில் மிகுந்த கவனத்துடன் அவர்கள் பேணப்பட வேண்டும்.''

இதில் உள்ள முரண்பாடு சுவாரஸ்யமானது ஒரு பக்கம் ஆசிரியர்களுக்கு சமூகத்தில் ஒரு மோசமான தோற்றம் இருக்கிறது. இன்னொரு பக்கத்திலோ ஆசிரியர்களிடமிருந்து மிக அதிக அளவிற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

சில பெற்றோர்கள் தங்களது குழந்தைகளின் முன்னிலையிலேயே ஆசிரியர்களை சிறுமைப்படுத்தவோ, அவமானப்படுத்தவோ தயங்குவதில்லை என்றும் சில ஆசிரியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஒரு பண்பலை வானொலியில் ஒலிபரப்பப்படும் 'பஜாதே ரஹோ' என்ற நிகழ்ச்சியில், அறிவிப்பாளர் தனது ஆசிரியர்களுக்கு டாபர்மேன், ஸ்லீப்பிங் பியூட்டி என்றெல்லாம் பட்டப் பெயர் வைத்திருந்தது பற்றி சொல்கிறார். உடனே வானொலி நேயர்கள் தங்களது பள்ளி நாட்களில் தங்களது ஆசிரியர்களுக்கு சூட்டியிருந்த பட்டப் பெயர்களைச் சொல்கிறார்கள். இவ்வாறு அது ஒரு பொழுதுபோக்காக மாற்றப்படுகிறது (2013 ஏப்ரல் 4 அன்று அந்த நிகழ்ச்சி ஒலிபரப்பானது).

ஆசிரியர்களுக்கு பயிற்சி தேவை என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். அதே நேரத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். பல மாநிலங்களில் தொழில் ரீதியாக பயிற்சிப் பெற்ற ஆசிரியர்கள் போதுமான அளவிற்கு இல்லை. இத்தகைய நிலைமைகளில், சில மாநில அரசுகள் ஆசிரியர்களுக்கான குறைந்தபட்ச தகுதிகளை, தேசிய ஆசிரியர் பயிற்சி மன்றத்தின் (என்சிடிஇ) வரையறைகளிலிருந்து தளர்த்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன. ஆந்திரா போன்ற சில மாநில அரசுகள், ஆசிரியர் பயிற்சிக்கான மாற்று ஏற்பாடுகளைக் கண்டுபிடிப்பதில் ஒரடி முன்னால் சென்றிருக்கின்றன. அண்மையில் ஆந்திர மாநிலத்தின் பள்ளிக் கல்வித்துறை ஆணையர் மற்றும் இயக்குநர், பள்ளிகளில் கடுமையான தண்டனைகள் தரப்படுவதை தடுப்பதற்கான உறுதியான சட்டங்கள் கொண்டு வருவதோடு, இதுகுறித்து ஆசிரியர்களுக்கு வகுப்பு நடத்துவதற்காக காவல்துறையினர் பயன்படுத்தப்படுவார்கள் என்று கூறினார். ஆசிரியர்களின் பின்னணி குறித்த சோதனைகள் கறாராக மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். ஒரு ஆசிரியர் அவரது முந்தைய பள்ளி ஆவணங்களின் அடிப்படையில் காவல்துறை அளிக்கிற ''நடத்தைச் சான்றிதழ்'' தாக்கல் செய்தால் மட்டுமே பள்ளிகளால் பணியில் நியமிக்கப்படுவார் என்றும் அவர் அறிவித்தார் (TNN, 2013 பிப்ரவரி 19).

ஆசிரியர்களின் பணி நியமனம், ஆசிரியர் பயிற்சி இரண்டையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். இரண்டும் மாறுபட்டவை என்றாலும் ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளவையும் கூட. ஆசிரியர் பயிற்சிக்கான தற்போதைய பாடத்திட்டத்தில் சீர்திருத்தம் செய்வது, பயிற்சிக்கான கால அளவை அதிகரிப்பது மட்டுமே போதாது. ஆசிரியர் தொழிலுக்கு ஏற்றவர்களை தேர்வு செய்வதிலும் மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும். பயிற்சி பெறாத, தகுதியில்லாத, குறைந்த ஊதியம் பெறக்கூடியவர்களை, குறைந்தகால ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பது போன்ற குறுக்கு வழிகளை நாடாமல், பயிற்சி முறையும் தேர்வு முறையும் மிகவும் கடுமையானதாக கறாரானதாக மாற்றப்பட வேண்டும்.

### சீர்குலையும் பணிச்சூழல்

தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறு ஏற்பாடுகளை கல்வி உரிமைச் சட்டம் கட்டாயமாக்குகிறது. ஆனால், பள்ளியில் உள்ள நிலைமையோ அதிலிருந்து வெகுதூரம் விலகியிருக்கிறது. சரியான ஆசிரியர் – மாணவர் வீதம் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில், ஆசிரியர் பற்றாக்குறையால் ஏற்படும் பணிச் சுமையையும் ஆசிரியர்களுக்கு ஏற்படக்கூடிய மன அழுத்தத்தையும் புரிந்துகொள்வது கடினமல்ல. பல வகுப்புகளில் ஆசிரியர்கள் 70 முதல் 80 குழந்தைகள் வரை கையாள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பலரும் நினைப்பதற்கு மாறாக, குறைந்த எண்ணிக்கையிலான குழந்தைகளுக்கு பாடம் நடத்துவதற்குத்தான் சிறப்புத் தகுதிகளும் திறன்களும் தேவை. ஒரு பெரிய வகுப்பை ஒரே ஒரு ஆசிரியர் நிர்வகிக்கிறபோது, அதனால் ஏற்படும் பிரச்சனைகள் மேலும் மேலும் சிக்கலாகின்றன. குழந்தைகளை ஒரே இடத்தில் உட்கார வைப்பதிலிருந்தே அடிப்படையான சவால்கள் உடனடியாகத் தொடங்கிவிடுகின்றன. ''சரியான வகுப்பறைச் சூழல்''



www.unicef.org

பற்றிய பள்ளி நிர்வாகங்களின் கண்ணோட்டம், பெரும்பாலும் பயனுள்ள பயிற்சி முறை என்று அவை எதைக் கருதுகின்றனவோ அதனோடு தொடர்புள்ளதாக இருக்கிறது. ஊசி விழுந்தால் சத்தம் கேட்கிற அளவிற்கு ஆசிரியர்கள் வகுப்பறையை அமைதியாக வைத்திருக்க வேண்டும் என்று நிர்வாகங்கள் எதிர்பார்க்கின்றன. ஆசிரியர்களின் திறமையை மதிப்பிடுவதற்கான தகுதியாக இது எடுத்துக் கொள்ளப்படுகிறது. ‘‘தனது வகுப்பறையில் ஜனநாயக வழிமுறைகளைக் கையாள ஒரு ஆசிரியர் முயல்கிறார் என்றால், அதனால் வகுப்பில் இரைச்சலும் குழப்பமும் ஏற்படுகின்றன என்றால், அந்த ஆசிரியர் பலவீனமானவராக சித்தரிக்கப்படுகிறார்,’’ என்று ஒரு சர்வோதயா பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர் கூறினார். குடிநீர், கழிவறைகள், விளையாட்டு மைதானங்கள் போன்ற அடிப்படை வசதிகளும், ஏன் வகுப்பறைகளும் நூலகங்களும் சோதனைக் கூடங்களும் கூட போதுமான அளவிற்கு இல்லாத நிலைமையும், மாணவர்கள், ஆசிரியர்கள் இருதரப்பாரின் மன அழுத்தங்கள் அதிகரிக்கிறது. இத்தகைய பலவீனமான கடினமான பணிச்சூழல்களால் ஏற்படுகிற பதற்ற நிலைகளை, ஆசிரியர்களின் அணுகுமுறையில் மட்டும் மாற்றம் ஏற்படுவதாலோ, குழந்தைகள் தொடர்பான ஆக்கப்பூர்வமான வழிமுறைகளை அவர்கள் கையாள்வதாலோ மட்டும் தணித்துவிட முடியாது.

### கல்வி உரிமைச் சட்டம் ஆசிரியர்களுக்கு அதிகாரம் அளிக்கிறதா ?

குழந்தைகளுக்கு இலவசமாக, ஒரே மாதிரியான நல்ல தரமான கல்வியை வழங்குவது, குழந்தைகள் கவுரவத்துடன் நடத்தப்படுகிற ஒரு ஆக்கப்பூர்வமான, பாதுகாப்பான, செயல்திறன் மிக்க கற்பித்தல் – கற்றல் சூழலை ஏற்படுத்துவது என்ற, நீண்டகாலமாக மறுக்கப்பட்டு வந்த குழந்தைகளின் உரிமைகளை கல்வி உரிமைச் சட்டம் அங்கீகரிக்கிறது. ஆனாலும், குழந்தைகளை மேல் வகுப்பிற்கு அனுப்பாமல் அதே வகுப்பில் வைத்திருக்கக் கூடாது என்ற கொள்கை, தொடர்ச்சியான மற்றும் விரிவான மதிப்பீடு நடைமுறை, எவ்வகையான தண்டனைக்கும் தடை போன்ற சட்டத்தின் சில விதிகள் ஆசிரியர்களுக்கு சில கவலைகளை ஏற்படுத்தியுள்ளன. பெரும் எண்ணிக்கையிலான அளவுகோல்களின் அடிப்படையில் விரிவாகவும் தொடர்ச்சியாகவும் குழந்தைகளை மதிப்பீடு செய்வது என்பது குழந்தைகளைப் பொறுத்தவரையில் மன அழுத்தமற்ற பள்ளிச் சூழலையும் கல்வி ஏணியில் அவர்களால் தடையின்றி ஏற முடிவதையும் உறுதிப்படுத்துகிறது என்றாலும் கூட, குழந்தைகள் கற்கிறார்கள், நன்றாகக் கற்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு யாரும் பொறுப்பாக்கப்படவில்லை என தெரிகிறது.

தண்டனைகளுக்கு தடைவிதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அநேகமாக அனைத்து ஆசிரியர்களும் அது ஒரு ஆக்கப்பூர்வமான நடவடிக்கை என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். பள்ளிகளில் குழந்தைகள் மூர்க்கத்தனமாகத் தாக்கப்படுவது குறைந்துள்ளது என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், ‘‘மன ரீதியான துன்புறுத்தல்’’ என்பது வெறுமையாக இருக்கிறது என்றும் அவர்கள் கருதுகிறார்கள். அந்தப் பதத்திற்கு எப்படி வேண்டுமானாலும் விளக்கம் அளிக்கலாம், அனைத்து ஆசிரியர்களும் குற்றவாளிகளாகக் கூடியவர்கள்தான் என்பதுபோல் அந்த விதி நடத்துகிறது, எல்லா குழந்தைகளும் ஒரே மாதிரியானவர்கள் என்பதுபோல் கருதுகிறது என்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். எல்லா ஆசிரியர்களும் குழந்தைகள் மீது அதிகாரம் செலுத்துவதில்லை, தண்டனை முறைகளை தாறுமாறாகப் பயன்படுத்துவதில்லை என்று அவர்கள் வலியுறுத்திக் கூறுகிறார்கள். பெரும்பாலான குழந்தைகள் கல்வி சார்ந்த காரணங்களுக்காகவே தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் ஆய்விலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில விதிவிலக்கான சம்பவங்களின் அடிப்படையிலும் ஊடகச் செய்திகளின் அடிப்படையிலும் உருவாக்கப்பட்டுள்ள இப்படிப்பட்ட கொள்கைகள் இதில் முக்கியப் பங்காற்றுகின்றன என்றும் ஆசிரியர்கள் கருதுகிறார்கள். ஒவ்வொரு வகுப்பிலும் ஓரிரு ரவுடித்தனமான மாணவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் சீர்குலைவுகளை ஏற்படுத்தக்கூடியவர்களாக இருக்கிறார்கள். மற்ற மாணவர்களை தொந்தரவு செய்கிறவர்களாக மட்டுமல்லாமல் ஆசிரியர்களையே கூட அவமதிக்கிறவர்களாகவும் தாக்கக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள் என்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

மேற்கு வங்க பள்ளி ஒன்றில் பணிபுரியும் ஒரு ஆசிரியர் கடந்த ஓராண்டில் தனது பள்ளியில் ஆசிரியர்கள் பெரிய ஆண் மாணவர்களை அவர்களது தவறான நடவடிக்கைகளுக்காக கண்டித்ததற்காக, அந்த மாணவர்களால் தாக்கப்பட்ட குறைந்தது மூன்று சம்பவங்களாவது நடந்துள்ளன என்று கூறினார்.

எந்த ஒரு வடிவத்திலும் தண்டனை கூடாது என்ற ஒட்டுமொத்தமான தடை, இப்படிப்பட்ட ரவுடித்தனமான குழந்தைகளை கையாள்வது குறித்த ஐயப்பாடுகளை ஆசிரியர்களுக்கு ஓரளவுக்கு ஏற்படுத்தியுள்ளது. அப்படிப்பட்ட குழந்தைகளை எந்த வகையில் கண்டித்தாலும் தங்கள் மீது புகார் செய்யப்படும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். ‘‘வகுப்பறையே கட்டுப்படுத்த முடியாததாக மாறுகிறபோது, தவறாக நடந்துகொள்ளும் குழந்தைகள் என்னை சிக்கலில் தள்ளிவிடுவார்கள் என்பது எனக்குத் தெரிகிறபோது நான் வகுப்பைவிட்டு வெளியேறி ஆசிரியர்கள் அறையில் சும்மா உட்கார்ந்துகொள்கிறேன். அது தவறுதான் என்பது எனக்குத் தெரிகிறது. சில மாணவர்களின் ஒழுங்கீனத்திற்காக அக்கறையுள்ள மாணவர்களும் விலை தரவேண்டியிருக்கிறது என்பதும் எனக்குத் தெரிகிறது,’’ என்று ஒரு மூத்த அரசுப் பள்ளி ஆசிரியர் கூறினார். அவருடன் பணியாற்றும் ஆசிரியர்கள் பலரும் அப்படிப்பட்ட மாணவர்களைக் கண்டுகொள்வதில்லை என்ற அணுகுமுறையை கையாளத் தொடங்கிவிட்டனர். அதேநேரத்தில் நலிந்த பின்னணிகளோடு வருகிற, மிகவும் ஆதரவு தேவைப்படுகிற குழந்தைகள்தான் இதனால் கல்வி ரீதியாகவும் வேறு வகைகளிலும் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஏனென்றால், அவர்களுக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய நிலையில் அவர்களது பெற்றோர்களும் இல்லை, ஆசிரியர்கள் தங்களது சொந்த பாதுகாப்புக் குறித்தே மிகவும் கவலைப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்றும் ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

வகுப்பறைக்கு ஆசிரியர்கள் செலுத்துகிற முழு அதிகாரத்தை கட்டுப்படுத்தவும் குழந்தைகள் மீது அவர்கள் கையாளக்கூடிய வன்முறைகளைக் கட்டுப்படுத்தவும் கல்வி உரிமைச் சட்டம் ஒரு வகையில் உதவுகிறது என்பதை மறுப்பதற்கில்லை. இது, குழந்தைகள் தொடர்பாகவும், கற்பித்தல் – கற்றல் நடைமுறைத் தொடர்பாகவும் தேசிய பாடத்திட்ட கட்டமைப்பு – 2005ல் கூறப்பட்டுள்ள வழிமுறைகளுடன் இது ஒத்துப்போவதாக இருக்கிறது. ஆனால், குழந்தைகளுக்கு இடையூறை ஏற்படுத்தும் அல்லது ஒரு துன்புறுத்தலாக எடுத்துக்கொள்ளப்படும் வகையில் ‘‘குழந்தையிடம் எதையும் சொல்ல முடியாது’’ என்று விளக்கம் அளிக்கக்கூடிய அளவிற்கு இன்னொரு முனைக்கு கொண்டு செல்லப்படுகிறபோது, ஆசிரியர்கள் தங்களுக்குப் பாதுகாப்பான ஒரு வழியை தேர்ந்தெடுக்கிறார்கள்; அது உண்மையிலேயே உதவிகள் தேவைப்படுகிற குழந்தைகளுக்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

**பிரச்சனையை எவ்வாறு கையாள்வது ?**

ஊடகச் செய்திகளும் குழந்தை உரிமைகள் ஆணையம் மேற்கொண்டது போன்ற ஆய்வுகளும், கொடுந்தண்டனை பிரச்சனை எவ்வளவு அவசரத்துடன் கையாளப்பட வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. தடை செய்வது என்பது நிச்சயமாக வரவேற்கத்தக்க ஒரு நடவடிக்கைதான். ஆனால், உண்மையான சவால் குழந்தைகள் அவமதிக்கப்படாத, சிறுமைப்படுத்தப்படாத, ஆசிரியர்கள் தாங்கள் அச்சுறுத்தப்படுவதாகவும் எதுவும் செய்ய இயலாதவர்களாகவும் உணரத் தேவையற்ற பள்ளிச் சூழலை உருவாக்குவதுதான். ஆசிரியர்கள் கற்பித்தலிலும் குழந்தைகள் கற்றலிலும் ஈடுபடுவதாக அந்தச் சூழல் அமைய வேண்டும். ஆசிரியர்களின் அணுகுமுறையை மட்டும் குறை கூறுவதன் மூலம், அவர்கள் மீது மட்டும் புகார்களை வைப்பதன் மூலம், உடன்படிக்கைகளில் கையெழுத்திட வைப்பதன் மூலம், அவர்களைக் கண்காணிப்பதன் மூலம், சிக்கலான நிலைமைகளைக் கையாள்வதற்கான கூடுதல் நடத்தை விதிகளை அவர்கள் மீது ஏற்றுவதன் மூலம் குழந்தைகளை அவமதிப்பதிலிருந்து அவர்களைத் தடுப்பதில் அல்லது பள்ளிகளில் சில சிக்கலான நிலைமைகளை கையாள வைப்பதில் நாம் வெற்றி பெறக்கூடும்.

ஆனாலும், இது இன்னொரு முனைக்குக்கொண்டு செல்லப்படுகிறபோது, பள்ளியில் ஏற்படக் கூடிய எந்த ஒரு சிக்கலும் தங்களது நலன்களுக்கு எதிராகப் போய்விடக் கூடும் என்று பார்க்கும் நிலைமைக்கு ஆசிரியர்கள் தள்ளப்படுவார்களானால், அதனால் பாதிக்கப்படக் கூடியது குழந்தைகள்தான் – ஒரு மாறுபட்ட வகையில்! குழந்தைகளின் கல்வி வளர்ச்சி ஒட்டுமொத்த வளர்ச்சி ஆகியவைத் தொடர்பாக ஆசிரியர்கள் ஆர்வமிழக்கக் கூடும் என்பதால், அதிகபட்ச ஆதரவும் வழிகாட்டலும் தேவைப்படுகிற குழந்தைகள்தான் பெருமளவுக்கு பாதிக்கப்படுவார்கள். குழந்தைகள் அவமதிக்கப்படுவது என்பது பல்வேறு சமூகப் பின்னணிகளில் நடைபெறுகிறது. அத்தகையத் தளங்களில் ஒன்றுதான் பள்ளிக்கூடம். குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைக் கையாள்கிறவர்களில் ஆசிரியர்களும் ஒரு பகுதியினர். ஆசிரியர்களின் அணுகுமுறைகளில்

மட்டும் மாற்றம் தேவை என்பது, ஆசிரியர்களின் தனிப்பட்ட மனநிலை மீது மட்டும் பழியை சுமத்திவிட்டு பள்ளிகளிலும் சமுதாயத்திலும் திருத்தப்படவேண்டிய பல்வேறு தவறுகளுக்கான பொறுப்பிலிருந்து நழுவுவதாகும். இந்தியாவின் ஆகப் பெரும்பாலான பள்ளிகளில் உள்ள உண்மையான நிலவரத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்த பிரச்சனை ஒரு ஒட்டுமொத்த பார்வையோடு அணுகப்பட வேண்டும். அதில் பெற்றோர், மாணவர்கள், பள்ளி நிர்வாகம், ஆசிரியர்கள் என அனைத்துத் தரப்பினரும் ஈடுபடுத்தப்பட வேண்டும். ஆசிரியர்களை மட்டும் தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்தி, எந்த ஒரு தவறு நடந்தாலும் அவர்களைக் குற்றவாளியாக்குகிற நிலைமையாக காணக்கூடாது. மேலும், பள்ளிகளில் போதுமான எண்ணிக்கையில் நன்கு கற்றறிந்த, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள். அத்துடன் தகுதி உள்ள ஆலோசகர்கள், முறையான உள்கட்டுமான வசதிகள், நியாயமான மாணவர் – ஆசிரியர் விகிதம் ஆகிய ஏற்பாடுகளும் உறுதிப்படுத்த வேண்டும். மாணவர்கள், ஆசிரியர்கள் இருதரப்பாருக்குமே ஒரு சாதகமான, ஆளுமை தரக்கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டும். அதில், ஆசிரியர்கள் பொறுப்பாக்கப்படுவதோடு, கற்பித்தலை மேற்கொள்கிறவர்களாக மட்டுமல்லாமல் பள்ளி, குழந்தைகள், கற்பித்தல் – கற்றல் தொடர்பான முக்கிய முடிவுகளில் ஈடுபடுகிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

---

**குறிப்புகள்:**

1. இந்த ஆய்வின் நோக்கம், இந்திய குழந்தைகளின் தினசரி பள்ளி அனுபவங்களில் எந்த அளவிற்கு தண்டனைகள் பங்கு வகிக்கின்றன என்பதை ஆராய்வதே ஆகும். ஆந்திரப் பிரதேசம், தில்லி, மத்திய பிரதேசம், ஒடிசா, ராஜஸ்தான், தமிழ்நாடு, மேற்குவங்கம் ஆகிய 7 மாநிலங்களில் மொத்தம் 6,632 குழந்தைகளிடையே இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இவர்களில் 6,623 (99.86%) குழந்தைகள் ஏதாவது ஒரு வடிவத்தில் தண்டனை அனுபவித்ததுப் பற்றி தெரிவித்தார்கள்.
2. உத்தர்கண்ட், மேற்கு வங்கம், மகாராஷ்டிரா, தில்லி, ஹரியானா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் தனியார் மற்றும் அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த சில ஆசிரியர்களிடம் விரிவான பேட்டிகள் எடுக்கப்பட்டன.

**ஆதாரம்: June 15, 2013 VOL XLVIII No.24**
**Economic & Political Weekly**

## குழந்தை உரிமைகள் பாதுகாப்பு கமிஷன்: முழு அளவில் செயல்படுவது எப்போது ?

தமிழக அரசு ஏற்படுத்தியுள்ள, குழந்தை உரிமைகள் பாதுகாப்பு கமிஷனுக்கு, தலைவர் மட்டும் நியமிக்கப்பட்டு உள்ளார்; ஆறு உறுப்பினர்கள் நியமனத்தில், கால தாமதம் ஏற்படுகிறது. சிறார் நீதி சட்டம், கல்வி உரிமை சட்டம், பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் ஆகியவை, சரிவர அமல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக, குழந்தை உரிமைகள் பாதுகாப்பு கமிஷன் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. தமிழகத்தில், கடந்த ஆண்டு, மார்ச் மாதம், இந்த கமிஷன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இருந்தும் கமிஷனுக்கு தலைவர் நியமிக்கப்படவில்லை.

### ஐகோர்ட்டில் வழக்கு

கமிஷன் முழு அளவில் இயங்கும் வகையில், தமிழக அரசுக்கு உத்தரவிடக்கோரி சமூக ஆர்வலர், 'பாடம்' நாராயணன் ஐகோர்ட்டில் மனுத் தாக்கல் செய்தார். இதற்கு, அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், கமிஷன் செயல்படுவதற்கு, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதாக, தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, '2012ம் ஆண்டு டிசம்பருக்குள், குழந்தை உரிமைகள் பாதுகாப்பு கமிஷன் இயங்க வேண்டும்' என, ஐகோர்ட் உத்தரவிட்டது. தற்போது, கமிஷனுக்கு தலைவராக, சரஸ்வதி ரங்கசாமியை, தமிழக அரசு நியமித்துள்ளது. கமிஷனுக்கு, ஆறு உறுப்பினர்கள் நியமிக்கப்பட் வேண்டும். அதற்காக, 300க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டும், இதுவரை, உறுப்பினர் நியமிக்கப்படவில்லை. கமிஷன் இயங்குவதற்கு, 2012–13ம் ஆண்டுக்கு மட்டும், 37.33 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதில், 1.89 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டு உள்ளது. 'உறுப்பினர்களை விரைந்து நியமிக்க வேண்டும்' என, வழக்கு தொடுத்த, நாராயணன் கோருகிறார்.

### கோர்ட் அவமதிப்பு

அவர் கூறும்போது, 'தமிழக மக்கள் தொகையில், மூன்று கோடி எண்ணிக்கையில், குழந்தைகள் இருப்பர். குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கத்தான், சட்டங்கள் கொண்டு வரப்பட்டு உள்ளன. கமிஷனுக்கு, ஆறு உறுப்பினர்களை இன்னும் நியமிக்காதது, ஐகோர்ட் உத்தரவை அவமதிப்பு செய்வது போலாகும். எனவே, இந்தச் சட்டங்களை முறையாக அமல்படுத்தும் வகையில், மாநில கமிஷனுக்கு, விரைவில் உறுப்பினர்களை நியமிக்க வேண்டும்,''என்றார். ஏற்கனவே, மாநில கமிஷன் தலைவராக, சரஸ்வதி ரங்கசாமி நியமிக்கப்பட்டதை எதிர்த்து ஐகோர்ட்டில், நாராயணன் மனுத்தாக்கல் செய்துள்ளார். சட்டத்தில் கூறியுள்ளபடி, சரஸ்வதி ரங்கசாமி தகுதி பெற்றிருக்கவில்லை என்றும், அவரது நியமனத்தை ரத்து செய்ய வெண்டும் என்றும் கோரி உள்ளார். இவ்வழக்கு, ஐகோர்ட்டில் நிலுவையில் உள்ளது

**– தினமலர், 1.7.2013**

# அதிகாரத்துவ அமைப்புகளின் கடமைகள்

## இலவச, கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமைச் சட்டம் 2009

1. ஒவ்வொரு பள்ளியும் எந்த ஒரு/அனைத்து குழந்தைகளையும் அவர்கள் உரிய ஆவணங்களைத் தர முடியாமல் போனாலும் பள்ளியில் சேர்க்கைக்காக அனுமதிக்க வேண்டும்
2. ஒவ்வொரு பள்ளியும் குழந்தை / பெற்றோர்களிடமிருந்து எந்த நேரத்திலும், எதற்காகவும் கல்விக் கட்டணமும் (பணமாகவோ / வேறு வகையிலோ) வசூலிக்கக் கூடாது
3. எந்தக் குழந்தையும் உடல்ரீதியான, மனரீதியான தண்டனை அல்லது எந்த வகையான பாகுபாட்டுக்கும் ஆளாக்கப்படவில்லை என்பதையும் ஒவ்வொரு பள்ளியும் உறுதிப்படுத்தும்
4. ஒவ்வொரு குழந்தையும் 8 வருடங்கள் கல்வியை நிறைவு செய்வதையும் எந்தக் குழந்தையும் தோல்வி என்ற பெயரில் அதே வகுப்பில் தொடர்ந்து இருக்க வைக்கப்படவில்லை, பள்ளியிலிருந்து வெளியேற்றப்படவில்லை என்பதை ஒவ்வொரு பள்ளியும் உறுதிப்படுத்தும்
5. ஒவ்வொரு பள்ளியும் குழந்தைகளின் வயதுக்கேற்றவாறு சேர்க்கப்படுகிறார்கள் என்பதையும், உரிய வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு (அவர்கள் அதுவரை பள்ளியில் சேர்க்கப்படவில்லை என்றால்) ஏனைய குழந்தைகளுக்கு இணையான அறிவைப் பெறும்வகையில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுவதை ஒவ்வொரு பள்ளியும் உறுதிப்படுத்த வேண்டும்
6. ஒவ்வொரு ஆசிரியரும், ஒவ்வொரு நாளும் குறைந்தது 4 மணி நேரம் ஒரு வகுப்பில் பாடம் நடத்த வேண்டும்.
7. ஓர் ஆண்டில் ஒவ்வொரு பள்ளியும் கட்டாயமாக 220 நாட்கள் திறந்திருக்க வேண்டும்
8. நடுநிலைப் பள்ளியாக இருந்தால் ஒவ்வொரு பாடத்திற்கும் ஆசிரியர்கள் (அறிவியல், கணிதம், சமூக அறிவியல், மொழி) இருக்க வேண்டும். முழு நேர தலைமை ஆசிரியர், கலை, சுகாதாரம் மற்றும் விளையாட்டுக் கல்விக்காக பகுதி நேர பயிற்றாளர்கள் இருக்க வேண்டும்
9. ஒவ்வொரு பள்ளியிலும் கீழ் கண்டவை கண்டிப்பாக இருக்க வேண்டும்
   அ) ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒரு வகுப்பும் தலைமை ஆசிரியருக்கு தனி அறை
   ஆ) மாணவ மாணவியருக்கு போதுமான அளவில் தனிக் கழிப்பறைகள்
   இ) குடிதண்ணீர் வசதி
   ஈ) பயன்படுத்தும் வகையில் உள்ள விளையாட்டு மைதானமும், விளையாட்டு உபகரணங்களும்
   உ) நூலகத்தில் புத்தகங்களும் வார, மாத இதழ்களும்
   ஊ) மதிய உணவு தயாரிக்க சமையலறை
   எ) தடையில்லாமல் சுலபமாக அணுகக்கூடிய பாதை
   ஏ) அனைத்து பருவ காலங்களிலும் தாக்குப்பிடிக்கும் கட்டிடங்களும், வேலியிட்ட/ இரும்புக் கதவு கொண்ட வெளிச்சுவர்
10. ஒவ்வொரு பள்ளியிலும், பள்ளி மேலாண்மை குழு ஒன்று கண்டிப்பாக இருக்க வேண்டும், அதன் உறுப்பினர் நான்கில் மூன்று பேர் (3/4) பொதுவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பெற்றோர்களாக இருக்க வேண்டும்; பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்களின் பட்டியல் வெளிப்படையாக வைக்கப்பட்டிருக்க வேண்டும்
11. பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள்
    1. பள்ளியின் செயல்பாட்டைக் கண்காணிக்க வேண்டும்
    2. பள்ளி வளர்ச்சி திட்டத்தை தயாரிக்க வேண்டும்

3. ஆசிரியர்களின் பொறுப்பினை உறுதிப்படுத்த வேண்டும்

12. இந்தப் பள்ளியின் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்களின் பெயர்கள் கீழேகொடுக்கப்பட்டிருக்கிறது( எந்த ஒரு உதவி அல்லது ஆலோசனைக்காக நீங்கள் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம்
    அ) (உறுப்பினர்களின் பெயர்)
    ஆ)(உறுப்பினர்களின் பெயர்) – என்ற தகவல் வைக்கப்பட்டிருக்க வேண்டும்
13. குறை தீர்ப்புக்கான உரிமை
14. தனியார் பள்ளிகளில் நலிந்த மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவுக் குழந்தைகளுக்கு 25% ஒதுக்கீடு

**தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (NCPCR)**
**பகுதி 4 கல்வி உரிமைச் சட்டப் பிரிவு**

For Private Circulation Only

# உணவு பாதுகாப்புக்கான இடைக்கால சட்டம் 2013 ன் கீழ் இவர்களுக்கு வயதுக்கு தகுந்த (அதிகபட்ச), இலவச மற்றும் சத்தான உணவு உறுதி செய்யப்படுமா?



http://news.bbc.co.uk/2/hi/south_asia/7445570.stm

*Education Material Published on behalf of*

**Tamil Nadu Child Rights Protection Network by**
**Human Rights Advocacy and Research Foundation (HRF)**

*# 10, LDG Road, Little Mount, Saidapet, Chennai - 600 015, India.*
*☎ 22353503, 22351919 Fax : 22355905,*
*E-mail : humanrightsadvocacyandresearch@gmail.com*
*website : www.humanrightsadvocacyandresearchfoundation.org*